பக்கங்கள்:15 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 27 வெள்ளிக்கிழமை 11.03.2022 கதிர் 126

### இது ரகசியம் அல்ல!

ஆளும் தரப்புக்கு எதிராக ஆளும் கூட்டமைப்புக்குள்ளேயே கிளர்ந்திருக்கும் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்றோர் தரப்பில் இப்போதைக்கு பத்துக்கு மேற்பட்ட எம்.பிக்கள் உள்ளனர் என்று கூறப்படுகின்றது. ஆனாலும் ☞2

## தனிவழிப் பயணத்தை உறுதிப்படுத்தியது சு.க.

நாட்டில் அடுத்து நடைபெறும் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்துத்தான் போட்டியிடும் என்று அக்கட்சியின் சிரேஷ்ட உப தலைவரான அமைச்சர் நிமல் ஸ்ரீபால டி சில்வா தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு ☞13



## நாட்டின் நிலை படுமோசம்; அரசே உடன் பதவி விலகுக

### சந்திரிகா அவசர வேண்டுகோள்

இலங்கையின் தற்போதைய நிலைமை படுமோசமடைந்துள்ளது. இந்தப் பேராபத்திலிருந்து நாட்டை மீட்பதற்கு அரசிடம் எந்தத் திட்டங்களும் இல்லை. எனவே, அரசு உடன் பதவி விலகுவதே சிறந்தது.

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் ☞13



# நல்லாட்சியை விமர்சிப்பதற்கு 'மொட்டு'க்கு அருகதை இல்லை



## மைத்திரி பதிலடி; தேசிய அரசமைக்கும் யோசனைக்கு எதிராகவும் போர்க்கொடி

எனது தலைமையில் நல்லாட்சி திறம்பட நடைபெற்றது. இதை விமர்சிப்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியினருக்கு எந்த அருகதையும் கிடையாது.

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். ☞13

## கோட்டா - சம்பந்தன் 15ஆம் திகதி பேச்சு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு எதிர்வரும் 15 ஆம் திகதி ☞13

## மீனவருக்கு நிவாரணப் பொதி இந்தியாவும் வழங்குகின்றது!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்ச் 11

வடக்கு மாகாண மீனவர்களிற்கு சீனாவைத் தொடர்ந்து இந்திய அரசாங்கமும் நாளை மறுதினம் 13ஆம் திகதி நிவாரணப் பொதி வழங்குகின்றது.

இதன் முதல் கட்டமாக அன்று யாழ்ப்பாணம் வரும் இலங்கைக்கான இந்தியத் ☞13

## பெற்றோலுக்கு - ரூ.50/= டீசல் - ரூ.75 அதிகரிப்பு

### லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் அதிரடி

டீசல் மற்றும் பெற்றோல் ஆகியவற்றின் விலை நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது என லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி, அனைத்து வகையான டீசல் விலையையும் ஒரு லீற்றருக்கு 75 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. ☞13

## இலங்கை - இந்திய மீனவர்கள் கச்சதீவில் சிநேகபூர்வப் பேச்சு?



இந்திய கடற்றொழிலாளர்களுடன் கச்சதீவில் சிநேகபூர்வமான பேச்சு நடத்த விரும்புகின்றோம் என்று யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க ☞13

## சாரதிகளுக்கு விசேட அறிவிப்பு

காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பது மற்றும் ஒரு வருட காலத்துக்கு தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்குவது தொடர்பான அறிவித்தலை மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

அதன்படி, 2022 ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி முதல் 2022 ஜுன் மாதம் 30 ஆம் திகதி வரை காலாவதியாகும் சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலத்தை மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 2022 ஜுலை மாதம் 01ஆம் திகதி முதல் 2022 செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை காலாவதியாகும் ☞13

## அரச வேலையை நாடுவதாலேயே யாழில் வேலையற்றோர் அதிகம்

### மாவட்ட அரச அதிபர் கூறுகின்றார்

மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தொழிற்சந்தை நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலக மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களத்தின் இணைப்பாளர் கருணாகரனின் ☞13



## புத்தூரில் மின்சாரம் தாக்கி கணவன், மனைவி மரணம்

(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 11

யாழ்., புத்தூர் பகுதியில் நேற்றுப் பிற்பகல் மின்சாரம் தாக்கி கணவனும் மனைவியும் பரிதாபகரமாகச் சாவடைந்துள்ளனர்.

புத்தூர் பகுதியைச் சேர்ந்த குகப்பிரகாசம் (வயது 59), அவரது மனைவியான சுகுணா (வயது 55) ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர்.

வீட்டிலுள்ள நீர்த்தொட்டியில் மனைவி நீர் அள்ளும்போது மின்சாரம் தாக்கியுள்ளது. அவரைக்காப்பாற்ற முயன்றவேளை கணவனும் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகி இருவரும் சம்பவ இடத்திலேயே மரணித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் இடம்பெற்றபோது இரு பிள்ளைகளில் ஒருவர் பணிக்கும், மற்றையவர் பல்கலைக்கழகமும் சென்றிருந்த நிலையில், அவர்கள் வீடு திரும்பிய பின்னரே பெற்றோர் இறந்துகிடந்ததை அவதானித்து அச்சுவேலிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு வந்த அச்சுவேலிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

## யாழ்.நகரில் எரிவாயு சிலிண்டருக்கு வரிசை



நாட்டில் எரிவாயு சிலிண்டர்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், நேற்று யாழ். நகரில் எரிவாயு சிலிண்டர் விநியோகம் இடம்பெற்றது.

இதன்போது எரிவாயு சிலிண்டர்களைக் கொள்வனவு செய்வதற்காக யாழ். நகரில் மக்கள் நீண்ட ☞13

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிங்களத்தில் ஆளுமையாகப் பேசக் கூடிய விமல் வீரவன்ஸ உட்பட அவரது தரப்பினரின் குரல் நாடாளுமன்றில் ஒலிப்பதற்கு வாய்ப்பேயில்லை என்றே தெரிகின்றது.

அவர்கள் அனைவரும் இன்னும் அரசுக் கூட்டமைப்பின் உறுப்பினர்களாகவே நாடாளுமன்றத்தில் இருக்கின் றார்கள். தங்களைத் தனி அணி அல்லது கட்சியாக அவர்கள் சபாநாயகரிடம் முன்னிறுத்தவுமில்லை, அவர்களை சபாநயாகர் தனி அணி அல்லது கட்சியாக ஏற்றுக் கொள்ளவுமில்லை.

இந்தச் சூழலில் அவர்கள் தாங்கள் நாடாளுமன்றத்தில் பேசுவதற்கு நேரம் கோருவதானால், அரசுத் தரப்பு பிரதம கொறடவான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிடமிருந்துதான் அதனைப் பெற வேண்டும். ஆனால் அரசுக்குள் 'ஜின்ஜர் குறூப்' போல செயற்படும் அக்குழுவுக்கு அரசுத் தரப்பின் நேர ஒதுக்கீடு வழங்கப்பட மாட்டாது என்பதே நிலைமை. தேவையானால் எதிரணியின் நேரத்தைப் பெற்று அந்த நேரத்தில் அவர்கள் பேச முடியும். ஆனால் அவர்கள் எதிரணியுடன் சேர்ந்து செயற்படுவதோ, அல்லது பிற எதிரணித் தரப்புகள் அவர்களை அரவணைத்துச் செயற்படுவதோ இப்போதைய அரசியல் சூழ்நிலையில் சாத்தியமில்லை என்றே தெரிகின்றது. அத னால் விமல் – உதய கம்மன்பில அணியின் குரலை நாடாளுமன்றத்தில் வெறும் குறுக்கீடுகளின் போதுதான் கேட்கலாம். உரையாக அல்ல.

நேற்றும் நாடாளுமன்றத்தில் நாட்டின் தற்போதைய பிரச்சினைகள் தொடர்பான விவாதம் நடைபெற்ற போது அதில் உரையாற்றுவதற்கு முன்னாள் சக்தி, வலு அமைச்சர் உதய கம்மன்பில முயன்றார். அவரது பெயரையும் குறிப்பிட்டுத்தான் அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா நேற்று முதலில் அரசுத் தரப்புப் பேச்சாளர்களின் பட்டியலை அனுப்பினார். ஆனால் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ விடம் இருந்து வந்த ஒரு தொலைபேசி வழிகாட்டலை அடுத்து அவரின் பெயர் வெட்டி நீக்கப்பட்டதாகத் தெரிய வந்தது. நேர ஒதுக்கீடு வழங்கப்படாமையால் கம்மன்பில பேச சாத்தியப்படாமல் போயிற்று.

நாடாளுமன்றுக்கு வெளியில்தான் அவர்கள் தரப்பின் முழக்கங்களை இனிக் கேட்க முடியும். கேட்க வேண்டும். சமூக ஊடகங்களை அவர்கள் கனகச்சிதமாகப் பயன்படுத்துவர் என்று நம்பலாம்.

★ ★ ★

மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பேச்சுக்கு அழைத்திருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. கொழும்புக்கு இந்திய நெருக்குவாரங்கள் சற்றுத் தீவிரமான போதே கூட்டமைப்பை ஜனாதிபதி பேச்சுக்கு அழைப்பார் என்பது எதிர்பார்க்கப்பட்டதுதான். கடந்த வருடமும் இப்படி கூட்டமைப்பைப் பேச்சுக்கு அழைத்த ஜனாதிபதி கடைசி நேரத்தில் அதை ஒத்திவைத்தார். அந்த ஒத்தி வைப்புக் காலம் எட்டு மாதம். இம்முறையாவது திட்டமிட்டபடி அது நடந்தால், தாம் பதவிக்குவந்து இரண்டேகால் ஆண்டுகளின் பின்னர் முதல் தடவையாக தமிழர் தரப்புடன் அரசியல் பேச்சுக்களை அவர் தொடங்குகின்றார் என்றாகும்.

15ஆம் திகதி சந்திப்புக்கு ஜனாதிபதி தரப்பு அழைப்பு அனுப்பி விட்டது. கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் இணங்கி விட்டார். இனித்தான் சம்பந்தனுக்கு இருக்கின்றது சில்லெடுப்பு.

நேற்றுமுன்தினம் இவ்விடயத்தை யொட்டி ஜனாதிபதி செயலகத்தின் சார்பில் சம்பந்தன் ஐயாவுக்குத் தொலைபேசி அழைப்பு எடுக்கப்பட்ட போது அந்த உரையாடலில் சற்றுக் குழப்பம் இருந்திருக்கின்றது. வயோதிபம், மூப்பு, தளர்வு நிலையில் இருந்த ஐயாவின் உரையாடலை அந்தப் பக்கத்தில் இருந்த அதிகாரிகள் செவிமடுப்பதிலும், அவர்களின் தகவல்களை சம்பந்தன் ஐயா உள்வாங்குவதிலும் குழப்பம் இருந்ததாகத் தெரிகின்றது.

இந்த விடயம் குறித்து மேல் விவரங்களை சுமந்திரனுடன் பேசுங்கள் என்று கூறி சம்பந்தன் ஐயா தொலைபேசியைத் துண்டித்திருக்கின்றார்.

இது குறித்து, கூட்டமைப்பின் எம்.பி. ஒருவர்தான் முதலில் சுமந்திரனுக்குத் தகவல் தெரிவித்தார். அதன் பின்னரே ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சுமந்திரனுடன் தொடர்பு கொண்டார்.

முதலில் பேசிய கூட்டமைப்பின் சக எம்.பி., மேற்படி ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சம்பந்தன் ஐயாவுடன் தொலைபேசியில் பேசிய சமயம், மேலதிக செயலாளருக்குப் பக்கத்தில் தாம் இருந்தார் என்றும், உரையாடலில் குழப்பம் இருந்தமையைத் தான் அவதானித்தார் என்றும், அதனால் அந்த விடயத்தைக் கவனியுங்கள் என்றும் சுமந்திரனிடம் எம்.பி. தெரியப்படுத்தினார்.

அது மட்டுமல்லாமல், ஜனாதிபதியுடனான கூட்டமைப்பின் சந்திப்புக்கு எம்.பிக்கள் என்ற முறையில் எங்களையும் சம்பந்தன் ஐயா கூட்டிச் செல்வாரா என்றொரு கேள்வியையும் சுமந்திரனிடம் முன்வைத்தார் அவர்.

"எனக்குத் தெரியாது. அது சம்பந்தன் ஐயா முடிவு செய்யும் விடயம்." – என்று பதிலளித்தார் சுமந்திரன்.

கடந்த ஜூலையில் இதேபோல சந்திப்புக்குக் கூட்டமைப்பை ஜனாதிபதி கோட்டாபய அழைத்தபோது கூட்டமைப்புத் தலைவர் என்ற முறையில் தானும், பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் என்ற வகையில் மாவை சேனாதிராசா, சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரும், கூட்டமைப்புப் பேச்சாளர் சுமந்திரனும் அந்தப் பேச்சில் பங்கு பற்றுவர் என சம்பந்தன் தீர்மானித்திருந்தார்.

இப்போது புதிதாக எம்.பி. ஒருவர் தாங்களும் பங்கு பற்ற வேண்டும் என்ற கோரிக்கை ஒன்றை வலியுறுத்தலாக முன்வைத்திருக்கின்றார். அதுவும், சம்பந்தன் ஐயாவுடன் நேர்முக ஊடாட்டத்தில் – உறவு நிலையில் – புரிந்துணர்வு இல்லாத ஓர் எம்.பியின் வலியுறுத்தல் அது.

உடனடியாக, நேற்றுமுன்தினம் மாலையில், சம்பந்தன் ஐயா வீட்டுக்கு விரைந்தார் சுமந்திரன். தொலைபேசித் தகவலையும் தாம் அறிந்த விடயங்களையும் சுமந்திரன், சம்பந்தன் ஐயாவுக்குத் தெளிவுபடுத்தினார்.

ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சம்பந்தன் ஐயாவுக்கு அழைப்பு எடுத்த சமயம், மறுபக்கத்தில் மேலதிக செயலாளருடன் சம்பந்தப்பட்ட கூட்டமைப்பு எம்.பியும் இருந்தார் என சுமந்திரன் குறிப்பிட்ட போது "எங்கள் எம்.பிக்கு அந்தச் சமயத்தில் அங்கு என்ன வேலை?" – என்று கேட்டாராம் சமபந்தன்.

அதன் பின்னர்தான் கூட்டமைப்பின் பத்து எம்.பிகளுடன் தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசாவையும் சந்திப்புக்குக் கூட்டிச் செல்வது என சம்பந்தன் ஐயா தீர்மானித்தார்.

சம்பந்தன் ஐயாவுக்கு ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் தொலைபேசி எடுத்த சமயம் கூட்டமைப்பு எம்.பிக்கு அங்கு என்ன வேலை என்ற சம்பந்தன் ஐயாவின் கேள்வியை நானும் எனக்குள் கேட்டு விடயத்தைத் துருவினேன்.

விவகாரத்தை கையாண்டவர் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சந்திம என்பவர். அவர் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் செயலாளராகவும் பணியாற்றுகின்றார்.

அவர் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணாண்டோவில் அறையில் இருந்துதான் சம்பந்தன் ஐயாவுக்கு அழைப்பு எடுத்திருக்கின்றார். நமது அந்தக் கூட்டமைப்பு எம்.பி. சிங்களத்தில் சரளமாகப் பேசக் கூடியவர் என்பதால் நாடாளுமன்ற நாள்களில் அங்கு சிங்கள அமைச்சர்களின் அறைகள், அலுவலகங்களுக்குள் சரளமாகப் புகுந்து விளையாடி வருவது அவர் வழமை. அப்படிச் சென்ற சமயம் தான், சம்பந்தன் ஐயாவுடன் தொலைபேசி உரையாடல், தொ(ல்)லைபேசி உரையாடலாக அமைந்ததை அவர் அவதானித்திருக்கின்றார்.

அதை வைத்து, அவர் சுமந்திரனிடம் கிளறி விட, இப்போது பத்து, எம்.பிக்கள் மற்றும் மாவை என பதினொரு பேர் 'ரீம்' ஆக கோட்டாவைக் களத்தில் சந்திக்கச் செல்லுகின்றார் சம்பந்தன்.

15 ஆம் திகதி கொழும்பில் இந்தச் சந்திப்பு. அன்றுதான் கொழும்பை முடக்கும் போராட்டம் ஒன்றுக்கு மக்கள் ஐக்கிய சக்தி தயாராவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. பெற்றோல், டீசல் விலை எக்கச்சக்கமாக உயர்ந்திருப்பதால் ஏற்படக் கூடிய மக்கள் அதிருப்தி இந்த மக்கள் எழுச்சியில் பிரதிபலிக்கக் கூடும். எனினும், அன்று மாலை 3.30 மணிக்கு கொழும்பு காலிமுகத் திடலுக்கு முன்னால் உள்ள ஜனாதிபதி செயலகத்துக்கு மேற்படி சந்திப்புக்காகக் கூட்டமைப்பினர் செல்லக் கூடியதாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இதற்கிடையில் –

இன்றும் நாளையும் சென்னையில் நடைபெறும் ஒரு பொது நிகழ்வில் பங்கு பற்றுவதற்காக இன்று காலை சென்னை பயணமாகின்றார் சுமந்திரன் எம்.பி.

8ஆம் ஆண்டு உலகத் தமிழ் வம்சாவளி ஒன்று கூடலும், சாதனைப் பெண்கள் விருது வழங்கலும், உலகத் தமிழ் பாராளுமன்றக் கூட்டமும் சென்னையில் நடக்கின்றன.

இந்த நிகழ்வில் இலங்கையில் இருந்து இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், சுரேன் இராகவன், நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரன், வீ.இராதாகிருஷ்ணன், வேலுகுமார், எம்.ஹாரீஸ் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

கரி ஆனந்த சங்கரி (கனடா), வனுஷி வோல்டர் (நியூஸிலாந்து), கம்சாயினி குணரத்தினம் (நோர்வே), பிரியங்கா ராதாகிருஷ்ணன் (நியூஸிலாந்து), பி.ராமசாமி (மலேசியா), எம்.சரவணன் (மலேசியா) உட்படப் பலர் இந்நிகழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

– மின்னல் –




சிறுநீரகம் தேவை
31 வயது இளைஞர் ஒருவருக்கு
ஓ பொசிட்டிவ் ($O^+$) ரக சிறுநீரகம்
ஒன்று தேவை.
வழங்க முன்வருபவர்கள்
076 237 6603
என்னும் தொலைபேசி இலக்கங்களுடன்
தொடர்பு கொள்ளவும்.




* புலமைப்பரிசில்களும் உண்டு
உங்கள் எதிர்கால
வண்ணத்தினை
APIIT
உடன் தேர்ந்தெடுங்கள்
* Terms and Conditions apply
Visit us
on 11th & 12th
@ Jaffna Education
fair 2022
(Stall No : A1)
AWARDED BY STAFFORDSHIRE UNIVERSITY
STAFFORDSHIRE UNIVERSITY
Pearson
NCUK
THE UNIVERSITY CONSORTIUM
Colombo 0768 031 576
Kandy 0763 663 115
A·P·I·I·T
Inspire love for learning

# கல்விப் பொதுத் தராதர (உயர்தரம்) பரீட்சையின் பின்னரான தொழிற் தயார்படுத்தல் தெரிவுகள்

அண்மையில் நடந்து முடிந்த உயர்தரப் பரீட்சையின் பின்னர் பல மாணவர்களும் அடுத்தது என்ன? பரீட்சை முடிவுகள் வரும் வரை வெறுமனே காலத்தைக் கழிக்காது நாளுக்கு நாள் மாறிக் கொண்டிருக்கும் தொழில் உலகத்திற்கு ஏற்ப, நான் என்னை எவ்வாறு தயார்படுத்தலாம்? என்ற ஒரு மிகப் பெரிய கேள்விக்கான பதிலைத் தேடிக் கொண்டிருப்பீர்கள். உங்களுடைய தேடலுடன் கூடிய அத்தகைய கேள்விகளில் சிலவற்றிற்கு விடையளிக்கும் முகமாகவே இந்தச் சிறு கட்டுரை எழுதப்பட்டிருக்கிறது. மேலதிக தகவல்கள் தேவைப்படுபவர்கள் **thabouniv.jfn.ac.lk** எனும் மின்னஞ்சல் மூலம் கட்டுரையாசிரியரைத் தொடர்பு கொள்ளலாம்.

இன்றைய தொழில் உலகம் வெறுமனே வகுப்பறைக் கற்றல் உடனான தொழில் தேடுபவர்களை வரவேற்பதில்லை. வகுப்பறைக் கற்றலுக்கும் மேலதிகமாக மேலும் பல திறன்களை வளர்த்துக் கொண்டவர்களையே இன்றைய தொழில் தருநர்கள் தெரிவு செய்ய விரும்புகிறார்கள்.

தாய் மொழிப் புலமைக்கு மேலதிகமாக, ஆங்கிலத்தில் மேம்பட்ட அறிவு, மிகவும் ஒரு முக்கியமான ஒரு தகைமையாக இன்று பல நிறுவனங்களாலும் எதிர்பார்க்கப் படுகிறது. தெளிவான உச்சரிப்புடனான ஆங்கில அறிவும், எவருடனும் கூச்சமின்றி சரளமாக ஆங்கிலத்தில் தொடர்பாடல் செய்யக் கூடியவர்களை இன்றைய தொழில் உலகம் இருகரம் நீட்டி வரவேற்கிறது.

ஆங்கில அறிவிற்கு மேலதிகமாக கணனியுடனான பரிச்சயம் மற்றொரு அவசியமானதொரு தகைமையாகும். அத்துடன் இன்றைய இளையோர் மத்தியில் கணனி சார் தொழில் உலகம் முக்கியமான ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது. கணனிகளை இயக்கத் தெரிவதுடன் மட்டும் நின்றுவிடாது, அதற்கு மேலதிகமாக பல்வேறு கணனிப் பிரயோகங்களைத் **(Applications)** திறம்படக் கையாளத் தெரிவதும் உங்களை வேலைக்கு தெரிவு செய்யப்பட்டோர் பட்டியலில் முன்னிலைக்கு இட்டுச் செல்லும்.

நவீன தொழில் உலகில் கணனிகள் பல்வேறுபட்ட செயற்கை மதிநுட்ப முறையில் அமைந்த வேலைகளை மிக இலகுவாக செய்து முடிக்கின்றன. பாரிய அளவில் வளர்ச்சியடைந்துள்ள கணனிகளின் ஆற்றல் இதனைச் சாத்தியமாக்கியிருக்கின்றது. இயந்திரக் கற்றல் **(Machine Learning)** மற்றும் ஆழக் கற்றல் **(Deep Learning)** என்னும் துறைகள் மூலம் மிகவும் சிக்கலான பல வேலைகளை கணனியில் இலகுவாகச் செய்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இந்த இரண்டு துறைகளும் கணனி விஞ்ஞானத்தில் இன்று மிகவும் பிரபல்யமான உப பகுதிகளாக மாணவர்களாலும், தொழில் தருநர்களாலும் அடையாளப் படுத்தப்பட்டிருக்கின்றன.

கணனி உலகிற்கு அப்பால், வேறு துறைகளில் ஆர்வம் உள்ளவர்கள் தங்கள் ஆற்றலை வளர்த்துக் கொள்ள மேலும் பல துறைத் தெரிவுகளும் மாணவர்கள் முன்னே உள்ளன. **Fashion Designing** எனப்படும் நவீன ஆடை வடிவமைப்பு துறை, **Draughtsman** எனப்படும் கட்டடப் படவரைஞர் துறை, **Hospitality Management** எனப்படும் சுற்றுலாவுடன் சம்பந்தப்பட்ட விருந்தோம்பல் துறை அல்லது விருந்தோம்பல் முகாமைத்துவம் என்பனவும் அநேக மாணவர்களால் தேடிக் கற்கப்படும் துறைகளாக உள்ளன.

கற்பது எதுவாகினும் அதனை ஆழக் கற்பதுடன் தெளிவான புரிதலுடன் கற்பது நம்மை நல்லதொரு ஆற்றல் மிக்கவராக மாற்றும். கொரோனாவுக்குப் பின்னரான புதிய நடைமுறைகளில் மேலும் பல புதிய தொழில்கள் தோன்றியுள்ளன அல்லது ஏற்கனவே இருந்த பல தொழில் முறைகள் மாற்றம் பெற்றுள்ளன என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். மாணவர்கள் தம் முன்னே இருக்கும் தெரிவுகளின் அடிப்படையிலும், தமது துறை சார் விருப்பத் தெரிவின் அடிப்படையிலும் தமக்கான மேலதிக கல்வித் தயார்படுத்தலுக்கு இந்த கல்வித் தெரிவுச் சந்



தையை நல்லதொரு வாய்ப்பாக பற்றிப் பிடித்துக் கொள்ளலாம்.

**கதிரவேலு தபோதரன், PhD**
**பணிப்பாளர்,**
**தொழில் வழிகாட்டல் அலகு,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

மற்றும்

**சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**கணனி விஞ்ஞானத் துறை,**
**விஞ்ஞான பீடம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**







*Meet us on 11th & 12th @ Jaffna Education fair 2022. (Stall No : A1)*

## காலத்தின் தேவை கருதி கல்வித் துறைசார்ந்து காலைக்கதிர் எடுத்துள்ள முயற்சியின் முதல்படி 'காலைக்கதிர் கல்வி விசேட சிறப்பிதழ்'



காலத்தின் தேவை கருதி கல்வித் துறைசார்ந்து காலைக்கதிர் பத்திரிகை எடுத்துள்ள இம் முயற்சிக்கு வாழ்த்துரை வழங்குவதில் கல்வித் துறைசார்ந்தவன் என்ற அடிப்படையில் நான் மிகவும் பெருமை அடைகிறேன்.

கடந்த காலத்தில் உலகம் எதிர்கொண்ட COVID 19 தாக்கங்களும் அதனால் ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்ட மாற்றங்களும் எண்ணில் அடங்காதவை. குறிப்பாக இலங்கையில் 2019ம் ஆண்டு ஏப்பிரல் 22ம் திகதி இடம்பெற்ற தொடர் குண்டுத்தாக்குதலின் பின்னர் கிட்டத்தட்ட 3 வருடங்கள் மிக மோசமான பாதிப்பிற்கு உள்ளானது கல்வித் துறை இ கல்விச்சமூகம் மற்றும் மாணவ சமூகமும் என்பது தான் உண்மை. இதை யாரும் மறந்து விட முடியாது. குறிப்பாக கல்வித் துறையை நோக்குவோமானால் கல்விக் கட்டமைப்பு முறைமை முற்றிலுமாக மாறிப்போயுள்ளது. தோழில்நுட்பத்தின் செல்வாக்கானது கல்விக் கட்டமைப்பின்பால் மேலோங்கியுள்ளதை நாம் அனைவரும் உணரமுடியும். எனவே 3 வருடமாக எமது கல்விச் சமூகத்தில் ஏற்பட்டுள்ள பாரிய இடைவெளியை நேர்த்தியாகவும் நிதானமாகவும் நிரப்ப வேண்டியுள்ளது. அந்த வகையில் எதிர்காலத்தில் தோழில்நுட்பத்தை அடீப்படையாக கொண்டே கல்வி முறைமைகளையும் கட்டமைப்பையும் மாற்றியமைத்து செல்ல வேண்டிய தார்மீக கடமை எம் அனைவருக்கும் உண்டு. அந்த கோணத்தில் நாம் நோக்கும் போது, இந்த தருணத்தில் காலைக்கதிர் பத்திரிகை எடுத்துள்ள இம் முயற்சியை கல்விச்சமூகமாகிய நாம் வரவேற்கின்றோம்.

**கு. விக்னேஸ் - இயக்குனர் - IIS CITY CAMPUS**

# வடக்கின் தனித்துவம் மிக்க தனியார் உயர்கல்வி வளாகம் IIS

கடந்த 26 ஆண்டுகளாக வட இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் மற்றும் தொழில் நுட்ப கல்விகளை அறிமுகப்படுத்தி பல் லாயிரக்கணக்கான இளைஞர் யுவதிகளின் வள மான எதிர்காலத்திற்கு வழிகாட்டிய IIS நிறுவனம் புதிய யுக்திகளுடன் கூடிய புதிய அறிமுகங்களையும் புதிய எதிர்பார்ப்புகளுடனும் தனக்கே உரித்தான மிடுக் குடன் கல்வியாண்டு 2022ல் கால்பதிக்க உள்ளது.

இந்த கல்வியாண்டு 2022, IIS நிறுவனத்தை பொறுத்த வரையில் ஒரு மிக முக்கியமான ஆண்டாகக் கருதப்படுகிறது. உலகம் முழுவதும் COVID 19 தாக்கங் களில் இருந்து மீண்டெழுவதற்கான அடுத்த கட்ட நடவ டிக்கைகளில் கவனம் செலுத்த தொடங்கியுள்ளது. அந்த வகையில் எமது பிரதேசத்தின் வளர்ச்சி தொடர் பாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணங்களில் சிந்தித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் வளர்ச்சி களுக்கான முதுகெலும்பாக விளங்கும் மனிதவளத் தினைக் கட்டி எழுப்ப வேண்டிய தலையாய பொறுப்பு ஒவ்வொரு தரப்பினருக்கும் உள்ளது. எமது தேசத் தின் மனிதவளமானது, உயர்கல்வி மற்றும் தொழில் கல்விகளை முன்னெடுத்துவரும் அரச மற்றும் தனி யார் நிறுவனங்களால் உன்னிப்பாக கவனிக்கப்பட வேண்டிய கருப்பொருளாகும். ஒவ்வொரு சந்தர்ப் பத்திலும் மாணவ சமுதாயத்திற்கான சரியானதும் காத்தி ரமானதுமான இலக்குகளை நிர்ணயித்து உயர்கல்வியின் மகத் துவத்தை எடுத்தியம்ப வேண்டிய தார்மீக பொறுப்பு ஒவ்வொருவருக் கும் உண்டு. அந்த வகையில், IIS தனது பொறுப்பினை உணர்ந்து பிரதேசத்தின் வளர்ச்சிக்கும் நாட்டிற் கும் தனது சேவையை வழங்கி வரு கின்றது.




IIS City Campus நிறுவனத்தில் கணணி விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் ( Software Engineering), சிவில் பொறியியல் (Civil Enginee ring), வியாபார முகாமைத்துவம் (Business Management) துறைக ளில் தமது HND உயர்கல்விக ளுக்கு விண்ணப்பிக்க முடியும். அது மட்டுமன்றி Executive MBA (Master of Business Administra tion ) மற்றும் BScIT (Bachelor of Science in Information Techno logy) போன்ற துறைகளுக்காகவும் மாணவர்கள் உள்வாங்கப்பட உள் ளனர்.

பல்வேறு நிறுவனங்கள் வடக் கில் தமது உயர்கல்விச் செயற் பாடுகளை ஆரம்பித்த போதும் தமக் கான காலடியை தடம்பதிக்க முடி யாமல் உள்ளமையானது எமது மக் களுக்குIISன்மீதுள்ளநம்பிக்கையை இன்னமும்ஸ்திரப்படுத்தி காட்டுகின்ற மையை நிரூபித்துள்ளது. தொடர்ந் தும் IIS நிறுவனம் சமூக பொறுப் போடு பிராந்தியத்தின் வளர்ச்சிக்காக தனது சிறந்த உயர்கல்விச் சேவையை முன்னெடுக்க இருக் கின்றது.

மாணவர்கள் உயர்கல்வியின் பால் தமது திறன்களை வளர்த்துக் கொள்ள முற்படும் போது தொழில் துறையின் எதிர்பார்ப்புக்களை திருப் திப்படுத்தும் வகையில் தங்களைத் தயார்படுத்திக் கொள்வது முக்கியமா னதாகும். நவீன தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியை நாம் ஒவ்வொரு வரும் அறிவுத் தேடலிற்கான கள மாக்கிக் கொள்ள வேண்டும். எந்த வொரு துறைசார்ந்தோராக இருந் தாலும் உடனுக்குடன் இந்த உல கத்தை வாசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அப்போதுதான் இன் றைய வாழ்வியல் சவால்களை சந் திக்கும் சக்தியைப் பெறமுடியும். எனவே மாணவர்கள் எக்காலத்தி லும் சிறந்த வேலைவாய்ப்புக்களை யும் முதலீட்டிற்கான சந்தர்ப்பங் களையும் வழங்க வல்ல துறையில் தமது அறிவை வளர்த்துக் கொள்ள முயல்வது எதிர்காலத்தில் அவர்க ளுக்கும், பிரதேசத்திற்கும், நாட்டிற் கும் நன்மையாகவே அமையும் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இட மில்லை. உலகை ஆக்கிரமித்து வரும் இவ் அறிவுசார் பொருளாதா ரத் திற்கு ஏற்ப நம்மை தயார்ப்படுத் தல் ஊடாகவே எதிர்கால உலகின் சவால்களை நாம் வெல்ல முடியும்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இளைஞர்களுக்கு அரியவாய்ப்பு

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை எமது அழியா சொத்துக் கல்விதான். யுத்தத்தினாலும், அதன் பின்னர் வந்த நெருக்குவாரங்களினாலும் தேசிய மட்டத்திலும், சர்வதேச தரத்திலும் நமது தமிழர் தாயகம் அத்துறையில் பின்னடைவு கண்டு வருகின்றது என்பது வருத்தந் தரும் உண்மை.

கல்வித்துறை வீழ்ச்சி என்பது யுத்தத்தினால் நலி வுற்றுக் கிடக்கும் எமது இனத்தை மேலும் வலுவிழக்கச் செய்து விடும்.

தரம் குன்றி வரும் எமது கல்வித்துறையை நாம் மீட்டெடுக்க வேண்டுமானால் அத்துறையில் பல மட்டங்களில் நாம் காத்திரமாக மீளெழுச்சி கொள்ள வேண்டும். அதற்கான செயற்பாடு முன்பள்ளி போதனை முறையில் ஆரம்பித்து உயர்கல்வித்துறை வரை விரிவடைய வேண்டும்.

அந்த வகையில் கல்லூரிகளில் உயர்தர வகுப்புக் கல்வியைப் பூர்த்தி செய்து அடுத்த கட்டமாக உயர் கல்வித் துறைக்கு நுழையும் மாணவனை உரிய துறையில், உரிய வழியில் நெறிப்படுத்துவது மிக முக்கியமாகும்.

நமது இளம் தலைமுறையின் திறமைகளை சரியாக அடையாளம் கண்டு அந்தந்தத் துறைகளில் அவர்களின் அறிவை விருத்தி செய்ய வழிப்படுத்துவதின் மூலமே, இழந்து போன எமது கல்வித்தர உயர்மட்டத்தை நாம் மீள எட்ட முடியும். அந்த வகையில் இன்றும் நாளையும் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தொழில் கல்வி வழிகாட்டிக்கான நிகழ்வு மிக முக்கியத்துவம் பெறுகின்றது.

பாடசாலைக் கல்வியை முடித்து, தமது அடுத்த கட்டத்தை நோக்கிய முடிவுகளை – தீர்மானங்களை – எடுக்க வேண்டிய மிக முக்கியமான கட்டத்தில் இருக்கும் நமது இளம் சமூகத்தினருக்கும் அவர் தம் பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களுக்கும் இவ்விடயத்தில் உரிய ஆலோசனைகள், கலந்தாய்வுகளை, ஆற்றுப்படுத்துகைகளை வழங்கக் கூடிய இத்தகைய நிகழ்வுகள் மிக முக்கியமானவை. காத்திரமாக உதவி அளிக்கக் கூடியவை. அவர்கள் இத்தகைய சமூக ஏற்பாட்டு நிகழ்வுகளை சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

★ மாணவர்கள் தமது தகைமைக்கும், இயலுமைக்கும், விருப்புக்கும் பொருத்தப்பாடான துறைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

★ அத்துறையில் அங்கீகரிக்கப்பட்டதும், புலமைத்துவம் மற்றும் வாண்மைத் தகைமையை அந்த மாணவனுக்கு வழங்கத் தக்கதுமான பணியை ஆற்றுகின்ற – பொருத்தப்பாடான – உயர்கல்வியையும் உயர்கல்வி நிறுவனத்தையும் மாணவன் தெரிவு செய்ய வேண்டியிருக்கும்.

★ அந்த நிறுவனத்தில் கல்வி பெறுவதற்கான வாய்ப்புகள் வசதிகள், கட்டுப்பாடுகள், மட்டுப்படுத்தல்கள், இடைஞ்சல்கள் தொடர்பில் அந்த மாணவனும் பெற்றோரும் ஐயம் திரிபற தீர்க்கமாக ஆராய்ந்து தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

★ சம்பந்தப்பட்ட உயர் கல்வித்துறை மற்றும் அதைப் போதிக்கும் நிறுவனத்தின் கல்விசார் நிகழ்ச்சித் திட்டம், அதன் விதிமுறைகள், செயற்பாடுகள், கட்டமைப்புகள், பீடங்கள், போதனை மையங்கள், கால அளவீடுகள், தனது மாணவன் தொடர்பில் அந்த உயர் கல்வி நிறுவனத்தின் கடப்பாடுகள், ஈடுபாடுகள், பொறுப்புகள், நிதிச் செலவுகள், அந்த நிறுவனம் வழங்கக் கூடிய பட்டங்கள், பாடநெறிகள், அவற்றுக்கான உலகளாவிய அங்கீகாரங்கள், மேற்படிப்பு வாய்ப்புகள், அந்தப் பட்டங்கள் மூலமான வேலை வாய்ப்புகள் போன்றவை எல்லாவற்றையும் மாணவனும் பெற்றோரும் அறிய வேண்டும்.

தமது வாழ்வானுபவத்தில் முக்கியமான – தீர்க்கமான – தீர்மானகரமான – முடிவை எடுக்க வேண்டிய வயதிலும் நிலையிலும் இருக்கும் மாணவன் தொடர்பில் அவனும் அவனது பெற்றோர்களும் சரியான தீர்மானத்தை எடுப்பதற்கு அரிய வாய்ப்பை இந்த நிகழ்வு வழங்குகின்றது. அவர்கள் அதை சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

# காணிகளை உடன் கையளிக்க வேண்டும் நில அளவை திணைக்களத்துக்கு கடிதம்

### வலி.வடக்கு தவிசாளர் சுகிர்தன் கோரிக்கை



கீரிமலை ஜனாதிபதி மாளிகைக்கு உட்படாத பகுதி காணிகளை உடனடியாக மக்களிடம் கையளிக்க வேண்டும். சம்பந்தப்படாத பொது மக்களுக்கு காணி சுவீகரிப்பு தொடர்பாக அனுப்பப்பட்ட கடிதங்களை வாபஸ் பெற வேண்டும் எனவும் நில அளவை திணைக் களத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளேன் என்று வலிகாமம் வடக்கு தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

வலி.வடக்கு பிரதேச சபையில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

வலிகாமம் வடக்கில் நகுலேஸ்வரம் ஜே - 226 கிராம சேவையாளர் பிரிவில் மக்களுடைய காணிகளை சுவீகரிக்க நடவடிக்கை இடம்பெற்ற போது மக்களால் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு அவை நிறுத்தப்பட்டன.

இந்த நிலைமையில் 2019 ஆம் ஆண்டு அப்போதைய வடமாகாண ஆளுநராக இருந்த சுரேன் ராகவன் காணிகளை விடுவிப்பேன் என எழுத்து மூலம் தெரிவித்திருந்தும் இன்று வரை அந்தக் காணிகள் விடுவிக்கப்படாத நிலையில், நகர அபிவிருத்தி அதிகார சபையின் தேவைக்காக அளவீடு செய்ய முயற்சித்த போது மீண்டும் மக்களால் போராட்டங்கள் செய்யப்பட்டு நிறுத்தப்பட்டு இருந்தன.

இந்நிலையில் விடுவிக்கப்படுவதாகக் கூறப்பட்ட மக்களின் நிலங்களும் நில அளவைத் திணைக்களத்தால் சுவீகரிக்கப்படுகின்றன என கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ள நிலையில் மக்களிடையே அச்சம் ஏற்பட்டுள்ளது.

இந்த இடங்களில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஆலயங்கள் உட்பட மயானங்கள் போன்ற முக்கிய இடங்கள் உள்ள நிலையில் இவ்வாறு உதாசீனமாக மேற்கொள்ளப்படும் நில அளவைத் திணைக்களத்தின் செயற்பாடுகள் உடனடியாக வாபஸ் பெறப்பட வேண்டும் என மக்கள் என்னிடம் வலியுறுத்தியுள்ளனர்.

ஜனாதிபதி மாளிகைக்கு உட்படாத பகுதி காணிகளை உடனடியாக மக்களிடம் கையளிக்க வேண்டும். சம்பந்தப்படாத பொது மக்களுக்கு காணி சுவீகரிப்பு தொடர்பாக அனுப்பப்பட்ட கடிதங்களை வாபஸ் பெற வேண்டும் எனவும் நில அளவை திணைக்களத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளேன். - என்றார்.

# மருத்துவப்பீட மாணவி எனக்கூறி வாடகை வீட்டிலிருந்தவர் கைது!

### யாழில் சம்பவம்

யாழ்.பல்கலைக்கழக மருத்துவப் பீட போலி அடையாள அட்டையுடன் தங்கியிருந்த யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவப் பீட போலி அடையாள அட்டையை காண்பித்து, தான் மருத்துவப் பீட மாணவி எனக் கூறி திருநெல்வேலி பகுதியில் வாடகை அறையில் தங்கி இருந்துள்ளார்.

அவரது நடவடிக்கைகள், நடத்தைகளில் வீட்டு உரிமையாளர் சந்தேகம் அடைந்து, அது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

தகவலின் பிரகாரம் வீட்டுக்குச் சென்ற பொலிஸார் வாடகை அறையில் தங்கி இருந்த யுவதியிடம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதன் போது அந்த யுவதி மருத்துவப் பீட மாணவி அல்லர் என்பதைக் கண்டறிந்த பொலிஸார், யுவதி காண்பித்த மாணவி அடையாள அட்டையும் போலியானது எனக் கண்டறிந்துள்ளனர்.

அதனை அடுத்து யுவதியை கைது செய்த பொலிஸார், விசாரணைகளின் பின்னர் யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் யுவதியை முற்படுத்தியமையை அடுத்து நீதிவான் யுவதியை 14 நாள்களுக்கு விளக்க மறியலில் தடுத்து வைக்க உத்தரவிட்டுள்ளார்.

# மருந்துகளின் விலைகள் எகிறும் வாய்ப்பு உள்ளது

டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியை மேலும் நெகிழ்வானதாக மாற்றுவதற்கு இலங்கை மத்திய வங்கி எடுத்த தீர்மானத்தை அடுத்து மருந்துகளின் விலை அடுத்த இரண்டு நாள்களில் அதிகரிக்கும் என தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையம் தெரிவித்துள்ளது.

அதற்கான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, அந்நியச் செலாவணி நெருக்கடி காரணமாக மருந்து இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதால், நாடு முழுவதும் உள்ள மருந்தகங்களில் மருந்துத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இலங்கை மருந்துகள் வர்த்தக சங்கத்தின் தலைவர் கபில டி சொய்சா கூறுகையில் –

மருந்துகளை விநியோகிக்க வழி இல்லை. மருந்து விநியோகஸ்தர்கள் மருந்துகளை விநியோகிப்பதில்லை. கேட்டால் நாணய மாற்று பிரச்சினை என்கிறார்கள். அதனால் சில மருந்துகள் இறக்குமதி செய்வதில்லை. முன்கூட்டியே தயார் செய்யாததுதான் பிரச்சினை.

டொலர் பிரச்சினையால் மருந்து நிறுவனங்கள் இறக்குமதி செய்ய அச்சப்படுகின்றன. அவர்களுடன் பேசி தீர்வு காணப்படும் என மருந்து, வழங்கல் மற்றும் ஒழுங்குமுறை இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இதன்படி, அடுத்த இரண்டு நாள்களில் மருந்துகளின் விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையம் தெரிவித்துள்ளது.

# யாழ்ப்பாணம் இன்ரறக்ட் கழகத்தால் 'ஒருதுளி உயிர் தரும்' இரத்ததானம்!

யாழ்ப்பாணம் இன்ரறக்ட் கழகம் 'ஒருதுளி உயிர் தரும்' எனும் தொனிப் பொருளில் வருடாந்தம் நடத்தி வரும் இரத்ததான முகாம் இந்த வருடம் இன்று (வெள்ளிக்கிழமை) காலை 8 மணி முதல் நடைபெற உள்ளது.

இந்தக் குருதிக்கொடை நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் இன்ரறக்ட் கழகத்தினர் அழைத்துள்ளனர்.

யாழ். கலாலயா பயிற்சியகம்
இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் (TVEC) பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிலையம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

A/L பெறுபேறுகளை எதிர்பார்த்து காத்திருக்கும் மாணவியரே!
வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!! சொந்தமாக தொழில் செய்ய விரும்பும் நங்கையரே!!!
மற்றும் ஆர்வம் உள்ள மகளிரே!

உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

- கேக் ஐசிங் – றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).
- உணவு தயாரித்தல் – உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங் கள். ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.
- FACIALS (முக அழகுக்கலை) Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)
- கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.
- BRIDAL DRESSINGS (மணமகள் அலங்காரங்கள்) இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகளும் பயிற்று விக்கப்படும்.

பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

இம்முறை A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவியருக்கு கட்டணத்தில் கழிவு வழங்கப்படும்.

கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்
16.03.2022 புதன் காலை 10.00 மணி
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்
20.03.2022 ஞாயிறு காலை 10.00மணி

மேலதிக விபரங்களை காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்
-இயக்குநர்-
Guru

# ஆசிய அபிவிருத்தி வங்கி தலைவர் இலங்கையை நேற்று வந்தடைந்தார்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசட்சுகு அசகவா நேற்று(வியாழக்கிழமை) இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

அவர், ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிதி அமைச்சர் உள்ளிட்டவர்களை சந்தித்து பேசவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள நிலையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசட்சுகு அசகவா இலங்கைக்கு வருகை தந்துள்ளார் என்பதுக் குறிப்பிடத்தக்கது.

# சில மருந்துகளின் விலைகள் மாற்றம்!

சில மருந்துகளின் விலைகளில் மாற்றம் செய்ய வேண்டியுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் கண்காணிப்பு இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலையை அதிகரிக்க எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்துக்கு அமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் தேசிய மருந்து நெறிப்படுத்தல் அதிகாரசபை நடவடிக்கை எடுத்து வருவதாகவும், மருந்து தட்டுப்பாடு தொடர்பில் மக்கள் தேவையாற்ற அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

Jaffna College Institute of Technology
Director, Jaffna College Institute of Technology
Calls for the following courses

Civil Draughtperson (one year)
Minimum Qualification Passed G.C.E.(OL) with pass in Mathematics & English
Course leads to:
- Follow courses in level 5
- Register for drawings at local councils

Computer Certificate Courses
(3 - 4 months Part time)
- Certificate in MS OFFICE - (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer - (Page Maker, PhotoShop & CorelDraw)
- Web Designing (HTML, CSS, JAVA Script PHP, MYSQL)
- JAVA, C++ Programming

Foundation in Information Technology
(FIT) (6 months part time)
Pre degree course leads to Bachelor|s in Information Technology (BIT), University of Colombo.

Commencement in the 2nd week of March 2022
The Courses will be conducted at our Jaffna Centre too
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road, Jaffna.
For further details contact
Tel no: 021225097502122 23382
Email: ejcitsltnet.lk.

IIS
26 வருட கால கல்வி அனுபவத்துடன் இணைந்து எதிர்காலத்தை உங்களுடையதாக்குங்கள்
Pearson BTEC
HND



COMPUTING
CIVIL ENGINEERING
BUSINESS MANAGEMENT

IIS தனித்துவம்
- மூன்றாம் நிலைக்கல்வி தொழில்கல்வி ஆணைக்குழுவின் (TVEC) அங்கீகாரம்
- PEARSON பிரதிநிதிகளின் நேரடி வருகையும் கண்காணிப்பும்
- தொழில்சார் பயிற்சியுடனான கற்கைநெறிகள்
- உயர்கல்விக்கே உரித்தான வளாகம்
- பட்ட மேற்படிப்புக்களை உடனடியாக மேற்கொள்ளும் வாய்ப்புக்கள்
- இலகு தவணை முறையிலான கட்டண வசதிகள்
- வேலை வாய்ப்புக்களை இலகுவாக பெறக்கூடிய சந்தர்ப்பங்கள்

கல்விப்பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணத்தின் ஓர் கல்விச்சாம்ராஜ்யம்

IIS CITY CAMPUS
441 ,CLOCK TOWER ROAD, JAFFNA
021 222 8060 | 071 777 4666
Info @ iis.lk

காலைக்கதிர்
Kalaikkathir

# லண்டனில் இலங்கைத் தூதரகம் முன்பு மகளிர் தினத்தில் தமிழர்கள் கவனவீர்ப்பு

சர்வதேச மகளிர் தினமான கடந்த 8ஆம் திகதி லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்திற்கு முன்பாக Freedom Hunters For Tamils என்ற அமைப்பினால் கவன வீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இதில் தமிழர்கள் பலர் கலந்து கொண்டு வடக்கு, கிழக்கில் பெண்களுக்கு எதிராக நடந்த வன் கொடுமைகளுக்கு சர்வதேசத்திடம் நீதி வேண்டி கோஷங்களை எழுப்பினர்.













## அமெரிக்காவில் தமிழ் மரபு விருது கலாநிதி சிவயோகனுக்கு கௌரவம்



அமெரிக்காவில் வடகரோலினா மாநிலத்தில் வசித்து வரும் கலாநிதி நாகலிங்கம் சிவயோகன் அவர்களுக்கு 2022 ஆம் ஆண்டுக்கான 'தமிழ் மரபு விருது' வழங்கப்பட்டுள்ளது.

இந்த விருதை கரோலினா தமிழ்க் கலைக்கூடமும், களரி அடிமுறை நிலையமும் இணைந்து வழங்கிக் கௌரவித்துள்ளன.

வருடாந்தம் அமெரிக்காவில் தமிழுக்காக வியத்தகு சேவை செய்பவர்களுக்காக உருவாக்கப்பட்ட இந்த விருது இவ்வருடம் ஈழத்து தமிழர் ஒருவருக்கு கிடைத்தமை மிகவும் அரிதான விடயமாகும். இந்த விருது வழங்கும் நிகழ்வு கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்றது.

இந்த விருது, இவர் வடகரோலினா மாநில ஆளுநருடன் தொடர்ச்சியாகத் தமிழ்மொழி பற்றி எடுத்துரைத்து, தை மாதத்தை தமிழரின் கலாசார மற்றும் மொழி மாதமாக பிரகடனப்படுத்த பின்னால் நின்று உழைத்தமைக்காக வழங்கப்பட்டது. இவரின் வேண்டுகோளை ஏற்று முதன் முதலில் 2019 ஆம் ஆண்டு மாநில ஆளுநர் இந்தப் பிரகடனத்தை வழங்கினார். அத்துடன் இவரின் வேண்டுகோளின் படி ஆளுநர் அதனைத் தானே வாசித்த காணொலியையும் வழங்கியிருந்தார். இவ்வாறு அமெரிக்காவில் ஒரேயொரு இடத்தில் மாத்திரம் நடந்தது. அத்துடன் கலாநிதி. சிவயோகன் தொடர்ச்சியாக ஒவ்வாரு வருடமும் இத்தகைய அறிவிப்பை பெற்றமையுடன், இவ்வருடம் தமிழ்நாட்டின் கீழடி மற்றும் பெருணை ஆகிய இடங்களில் நடந்த அகழ்வாராய்ச்சி முடிவுகளை விஞ்ஞான முறைப்படி எடுத்துரைத்து, அதனையும் ஆளுநரின் பிரகடனத்தில் இணைத்தார். இந்த முயற்சிக்காகவும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடக்கும் தமிழ் வகுப்பு மாணவர்களுக்காக தமிழ் இலக்கண கையேடுகள் தயாரித்து வழங்கியதற்காகவும் வழங்கப்பட்டது.

☞13

## கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 25 ஆவது பொதுப் பட்டமளிப்பு

### நாளையும் மறுதினமும்; 1,958 பேர் பட்டம் பெறுவர்




வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 25 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் பல்கலைக்கழக நல்லையா கேட்போர் கூடத் தில் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கத்தின் ஒருங்கிணைப்பில் நடைபெறவுள்ளது.

இந்தப் பொதுப் பட்டமளிப்பு விழாவில் 1,958 உள்வாரி, வெளிவாரி பட்டதாரி மாணவர்களுக்கும், பட்டப்பின் தகைமை பெறுபவர்களுக்கும் கௌரவப்பட்டம் பெறுபவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் வைத்தியக் கலாநிதி வேல்முருகு விவேகானந்தராஜா இந்நிகழ்வுக்கு தலைமை வகித்து, சம்பிரதாய பூர்வமாக பட்டங்களை வழங்கி கௌரவிப்பார். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி அமைச்சின் செயலாளர் சிரேஷ்ட பேராசிரியர் கே. கபில பெரேரா, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உபதவிசாளர் சிரேஷ்ட பேராசிரியர் சந்தன பீ.உடவத்த ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்கள்.

இம்முறை கிழக்கு பல்கலைக்கழகத்தால் இப்பல்கலைக்கழகத்தின் காலஞ் சென்ற முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் அவர்களின் சேவையை நினைவு கூர்ந்து கௌரவ விஞ்ஞான கலாநிதி பட்டமும் மட்டக்களப்பின் மூத்த எழுத்தாளரும் சமூகவியலாளருமான கோபால் என்றழைக்கப்படும் சீனித்தம்பி கோபாலசிங்கம் அவர்களின் சேவையை பாராட்டி கௌரவ முது இலக்கியமாணி பட்டமும் வழங்கப்பட இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு பல்கலைக்கழக வரலாற்றில் முதல் முறையாக 1958 மாணவர்களுக்கான பொதுப் பட்டமளிப்பு விழா நிகழ்வு நடத்தப்படுவது இதுவே முதல் தடவையாகும். இந்நிகழ்வில் வணிக நிர்வாகத்தில் முதுமாணி, முதுகலைமாணி, முதுகல்விமாணி, அபிவிருத்தி பொருளியலில் முதுமாணி ஆகிய 133 பட்டப்பின் தகைமைகளுக்கான பட்டங்களும், இரண்டு கௌரவப் பட்டங்களும் முதலாம் நாள் முதலாவது அமர்வில் வழங்கப்பட உள்ளன.

ஏனைய இளமாணிப்பட்டங்களுக்காக இரண்டாவது அமர்வில் 408 பட்டதாரி மாணவர்களும், மூன்றாவது அமர்வில் 340 பட்டதாரி மாணவர்களும், இரண்டாம் நாள் நிகழ்வில் முதலாவது அமர்வில் 330 பட்டதாரி மாணவர்களும், இரண்டாவது அமர்வில் 360 பட்டதாரி மாணவர்களும், மூன்றாவது அமர்வில் 385 பட்டதாரி மாணவர்களும் பட்டமளித்து கௌரவிக்கப்பட உள்ளனர் என உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம்நேற்று முன்தினம் கிழக்கு பல்கலைக்கழக செனட் கூடத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள்;

# மைத்திரிபாலவின் மேன்முறையீடு விசாரணைக்கு ஏற்றது நீதிமன்று!



போதுமான உளவுத் தகவல்கள் கிடைத்திருந்தும், உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை குண்டுத் தாக்குதல்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையை மையப்படுத்தி, 6 பேருக்கு எதிராக, கொழும்பு மாவட்ட நீதிமன்றில் 109 பேர் 90 கோடி ரூபா நட்ட ஈடு கோரி தாக்கல் செய்துள்ள வழக்கு தொடர்பில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேல்மாகாண சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள மேன்முறையீட்டு மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள அந்த நீதிமன்றம் புதன் கிழமை தீர்மானித்தது.

இது தொடர்பாக மேன்முறையீட்டு மனு புதன்கிழமை மேல் மாகாண சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றின் நீதிபதிகளான பிரான்க் குணவர்தன மற்றும் மஹேன் வீரமன் ஆகிய நீதிபதிகள் அடங்கிய குழாம் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

இதன்போது இரு தரப்பு வாதங்களை ஆராய்ந்த நீதிபதிகள், மனுவை விசாரணைக்கு ஏற்றதுடன், இந்த மேன்முறையீட்டு மனு மீதான விசாரணைகள் தொடர்பான வாதங்களை எதிர்வரும் ஜூலை 11 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தனர்.

போதுமான உளவுத் தகவல்கள் கிடைத்திருந்தும், உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை குண்டுத் தாக்குதல்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையை மையப்படுத்தி, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட 6 பேருக்கு எதிராக, கொழும்பு மாவட்ட நீதிமன்றில் 109 பேர், 90 கோடி ரூபா நட்ட ஈடு கோரி தாக்கல் செய்துள்ள வழக்கை முன்னெடுத்து செல்ல முடியாது எனவும் அவற்றை தள்ளுபடி செய்து தம்மை குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிக்குமாறும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சார்பில் இந்த சிவில் மேன்முறையீட்டு மனுவூடாக கோரப்பட்டுள்ளது.

கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி சத்துரிகா டி அல்விஸ், வாதத்தின் அடிப்படையிலான கோரிக்கையை ஏற்கனவே நிராகரித்த நிலையில், அந்தத் தீர்மானத்தை திருத்தி உத்தரவு பிறப்பிக்குமாறே இந்த மேன்முறையீட்டு மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கடந்த 2021 நவம்பர் 29 ஆம் திகதி, மாவட்ட நீதிமன்றில் உள்ள மேற்படி வழக்குகளை நகர்த்தல் பத்திரம் ஊடாக விசாரணைக்கு அழைத்து, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா வாதங்களை முன்வைத்திருந்தார். இதன்போது முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் கடந்த 2022 ஜனவரி 7 ஆம் திகதி நீதிமன்றம் தனது உத்தரவை அறிவித்து பிரதிவாதிகளில் ஒருவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கோரிக்கைகளை நிராகரிப்பதாக அறிவித்தது.

இந் நிலையிலேயே அதற்கு எதிராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேல் மாகாண சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றில் மேன்முறையீடு செய்துள்ளார்.

போதுமான உளவுத் தகவல்கள் கிடைத்திருந்தும், உயிர்த்த ஞாயிறு தின தற்கொலை குண்டுத்தாக்குதல்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையை மையப்படுத்தி, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட 6 பேருக்கு எதிராக, பாதிக் கப்பட்ட 289 பேர் இரு மாவட்ட நீதிமன்றங்களில் நட்டஈடு கோரி வழக்குத் தொடுத்துள்ளனர்.

கொழும்பு மற்றும் நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றங்களில் இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையடன், அவை ஊடாக பாதிக்கப்பட்டவர்கள் கோரியுள்ள நட்ட ஈட்டின் மொத்த பெறுமதி 125 கோடி ரூபாவாகும்.

உயிர்த்த ஞாயிறு தினமான கடந்த 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி, கட்டுவபிட்டிய தேவாலயம் மீது நடத்தப் பட்ட தற்கொலைத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட 180 பேர் நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றில் நட்ட ஈடு கோரி மனுத்தாக்கல் செய்துள்ளனர். கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்தில் இடம் பெற்ற தற்கொலை தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட 109 பேர் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

இந்த அனைத்து நட்ட ஈடு கோரும் வழக்குகளிலும் பிரதிவாதிகளாக -

முன்னள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பாதுகாப்பு செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர, தேசிய உளவுச் சேவை முன்னாள் பணிப்பாளரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருமான நிலந்த ஜயவர்தன மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகப் பெயரிடப் பட்டுள்ளனர். ஜனாதிபதி சட்டத்தரணி மில் பெரேரா, சட்டத்தரணி சந்துன் நாகஹவத்த உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழாம் இந்த வழக்குகளை தாக்கல் செய்திருந்தனர்.

## வெளிநாட்டில் பணியாற்றும் இலங்கையருக்கு விசேட ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கல்

### நிதி அமைச்சு தீர்மானம்

வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கைத் தொழிலாளர்களுக்கு விசேட ஊக்குவிப்பு கொடுப்பனவை வழங்க நிதியமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி வெளிநாட்டு பணியாளர்கள் இலங்கைக்கு அனுப்பும் ஒவ்வொரு டொலருக்கும் 20 ரூபா ஊக்கத்தொகையாக வழங்க நிதியமைச்சு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டுக்காக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் வெளிநாட்டு ஊழியர்களுக்கு பாதுகாப்பு மட்டுமன்றி, அவர்கள் பணம் அனுப்புவதற்கு அதிக சலுகைகளும் கிடைக்கும் என அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வெளிநாட்டு பணியாளர்கள் பணம் அனுப்பியதற்காக இதுவரை வழங்கப்பட்ட 8 ரூபா ஊக்குவிப்பு கொடுப்பனவு மற்றும் வெளிநாட்டு நாணயத் தாள்களை மாற்றுவதற்கான 10 ரூபா ஊக்குவிப்பு கொடுப்பனவை வழங்குவதை இடைநிறுத்துவதற்கு மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தீர்மானித்துள்ளார்.

## பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய ஒருவர் கைது

வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் நகைகளைத் திருடிய குற்றச்சாட்டுக்காக சந்தேக நபரொருவர் பிலியந்தலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிலியந்தலை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தவவலுக்கிணங்க பொகுந்தர பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போது இந்த கைது சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பொகுந்தர பகுதியைச் சேர்ந்த 30 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சந்தேக நபர் பிலியந் தலை, பாணந்துறை மற்றும் மிரிஹான பொலிஸ் நிலையத்தில் பதிவான பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர் புடையவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர் கெஸ்பேவ நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

## டொலருக்கு எதிராக ரூபாவின் பெறுமதி அதிகரிப்புக்கு இந்தியாவே காரணமாம்!

### கடனுக்கான நிபந்தனை அது என்கிறார் ஹர்ஷ டி சில்வா



இலங்கைக்கு 100 கோடி அமெரிக்க டொலர் கடனை வழங்கவேண்டுமானால், ரூபாவின் பெறுமதியை வீழ்ச்சியுறச் செய்ய வேண்டும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியதன் காரணமாகவே டொலரொன்றுக்கு எதிரான ரூபாவின் பெறுமதியை 230 ரூபாவாகப் பேணுவதற்கு மத்திய வங்கி தீர்மானித்திருக்கின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு -

அமெரிக்க டொலரொன்றுக்கு எதிரான ரூபாவின் பெறுமதியை 200 ரூபா என்ற மட்டத்தில் பேணுவதால் நாட்டிற்கு எவ்வித நன்மையும் கிட்டப்போவதில்லை. மாறாக வெளிநாடுகளில் பணிபுரிவோர் நாட்டுக்குப் அனுப்பும் பணம் அனுப்பும் வீதம் குறைவடையும் என்று கூறினோம்.

அதுமாத்திரமன்றி உள்நாட்டு ஏற்றுமதியாளர்கள் அதன்மூலம் பெற்ற வருமானத்தை வெளிநாட்டு வங்கிகளில் வைப்பிலிட்டு வைத்திருப்பதாகவும் அறியமுடிகின்றது. இவ்வாறு டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதியை 200 ரூபாவாகப் பேணுவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடைமுறைக்குப் பொருத்தமற்ற செயற்பாடுகளின் விளைவாக கடந்த 6 மாதகாலத்தில் சுமார் 150 கோடி ரூபா நட்டமேற்பட்டிருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போது டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதியை 230 ரூபாவாக மத்திய வங்கி தீர்மானித்திருக்கின்றது. அதேவேளை வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்புவோருக்கு, ஒரு டொலருக்கான ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்பட்டுவந்த 10 ரூபாவை 38 ரூபாவாக அதிகரிப்பதற்கு அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆகவே டொலர் ஒன்றுக்காகச் செலுத்தப்படும் 230 ரூபா என்பது மேற்குறிப்பிட்ட 38 ரூபா ஊக்குவிப்புத்தொகையையும் உள்ளடக்கியதா என்ற கேள்வி எழுந்துள்ளது. வெளிநாட்டுச்சந்தை செயற்பாடுகள் மற்றும் கொடுக்கல், வாங்கல்கள் முழுமையாக ஸ்தம்பிதமடைந்துள்ளன.

இந்த விடயத்தில் நெருக்கடிகளைக் குறைப்பதற்கு ஏதுவான வழிமுறைகளை கடந்த காலத்திலிருந்து நாம் தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றோம். இருப்பினும் அரசாங்கம் அதனை செவிமடுக்கவில்லை. இப்போது நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ இந்தியாவிற்குச் செல்வதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற காரணத்தாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

குறிப்பாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருடன் பஸில் ராஜபக்ஷ தொலைபேசி ஊடாகக் கலந்துரையாடலொன்றை முன்னெடுத்திருந்தார்.

அதன்போது இலங்கைக்கு இந்தியா 100 கோடி டொலர்களைக் கடனாக வழங்கவேண்டுமானால், ரூபாவின் பெறுமதியை வீழ்ச்சியடையச் செய்ய வேண்டும் என்று விதிக்கப்பட்ட நிபந்தனைக்கு அமைவாகவே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. எனவே எமது நாட்டு ரூபாவின் பெறுமதியை ஜெய்சங்கரே தீர்மானிக்கின்றார். ஆரம்பத்திலேயே இந்த நடவடிக்கையை முன்னெடுத்திருந்தால் தற்போது ஏற்பட்டிருக்கும் மிகமோசமான நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையேற்பட்டிருக்காது.

எவ்வித ஒருங்கிணைவும் முன்னேற்பாடுகளுமற்ற இந்த அரசாங்கத்தின் தூரநோக்கற்ற தீர்மானங்களின் விளைவாகவே நாடு இத்தகைய பாரதூரமான நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்கின்றது. - என்றார்.

# இன அரசியல் இன்னும் எத்தனை காலம்?

அக்கரை றை அலசல்



என்.சத்தியமூர்த்தி

இனப்பிரச்சினை என்பது இன்னும் பல தசாப்தங்களுக்கு தமிழ் மக்களைப் போட்டுத் தாக்கலாம், புரட்டி எடுக்கலாம். அல்லது, அவ்வாறான எண்ணவோட்டங்களுக்குள் மக்கள் தங்களை முடக்கிக் கொள்ளலாம். அவ்வாறு தமிழ் மக்கள் முடங்கி கிடப்பதையே அவர்களது அரசியல் தலைமைகளும் விரும்புகின்றன, எதிர் பார்த்து செயலாற்றுகின்றன. அவர்களை பொறுத்த வரையில், கொள்கை அரசியலுக்கு அப்பால் சென்று, தங்களது மக்கள் ஒரு வாக்கு வங்கி, அந்த வாக்கு வங்கிக்கு, சர்வதேசத்தில் நிரம்ப விலை உண்டு என்று அவர்கள் கருதுகிறார்கள்.

இனப்பிரச்சினை சார்ந்த உள்நாட்டு அரசியலை இரண்டு விதமாக பார்க்கலாம். ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் வாக்கு வங்கி முடிவை நிர்ணயிப்பதில் முக்கிய அங்கம் வகித்த காலம் உண்டு. ஆனால், தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமிழர் வாக்கு தனக்கு இல்லை என்று முடிவு செய்து கொண்டு, தமிழர் பகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் கூட செய்ய வில்லை. அவர் எதிர்பார்த்த படியே, தமிழர் வாக்குகள் அதிக அளவில் இல்லாமலேயே அவர் ஜனாதிபதி ஆனார் என்றே கூற வேண்டும்.

அது போன்றே, நாடாளுமன்றத்திலும் தமிழ் உறுப்பினர்களின் ஆதரவு இல்லாமல் பதவியில் தொடர முடியாது என்ற தமிழர்களின் எண்ணம் பல்வேறு காலகட்டங்களில் தவிடுபொடி ஆகி உள்ளது. தற்போதைய நாடாளுமன்றமும் ஓர் உதாரணம். ஆனால், தமிழர் தரப்பை சார்ந்து முந்தைய நாடாளு மன்றத்தில் ரணில் விக்கிரமசிங்க அரசு தொடர்ந்த தில், கூட்டமைப்பு சாதித்தது என்ன என்ற கேள்வியும் எழுகிறது.

**நல்ல தீர்ப்பு**

ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்று ஒரு பழமொழி உண்டு. அது இந்த தருணத் திற்கு ஏற்ற பழமொழியாக தோன்றாது. ஆனால், அதன் பயன்பாடு மூலம், தமிழர் தரப்பு இலங்கை அரசியலில் தங்களை நிலைநாட்டிக் கொள்ள முடியும். அவ்வாறு நிலைநாட்டிக் கொண்டாலே, தசாப்தங்கள் சென்றாவது, இனப்பிரச்சினைக்கு முற்றும் முடிவான நல்ல தீர்ப்பை பெற்றுக்கொள்ள முடியும். ஒன்றிணைந்த இலங்கையை ஒட்டி அமைந்தால் மட்டுமே, அது கால காலத்திற்கும் நல்ல தீர்ப்பாக அமைய முடியும்.

தற்போதுள்ள தேசிய அரசியல் சூழலை வைத்து நோக்கும் போது, தென்னிலங்கை மக்களின் பெரு வாரியினர், விலைவாசி உயர்வு, பொருள்களின் தட்டுப்பாடு, வாழ்வாதாரப் பிரச்சினைகள் என்று பல்வேறு விதங்களில் அல்லலுறுகிறார்கள். இதுவே தமிழ் மக்களுக்கும் பொதுவான விடயம். அடுத்து நடை பெறும் தேர்தல்களில், தென்னிலங்கை இனவாதத் தின் அடிப்படையில் மட்டுமே வாக்களிக்கும் என்று நம்ப இடமில்லை. இதுவே, தமிழ் வாக்காளர்களுக்கும், குறைவாகவோ, அதிகமாகவோ பொருந்தும்.



அடுத்து நிகழ்வது, மாகாண சபைத் தேர்தலாக இருந் தால் மட்டுமே, தமிழ் வாக்காளர்கள் தமிழர் கட்சிகளுக்கு மட்டும் வாக்களிப்பார்கள் என நம்பலாம். ஜனாதிபதி தேர்தலில், ராஜபக்ஷக்களுக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்று தமிழ் மக்களை அவர்களது அரசி யல் தலைமைகள் தயார்படுத்தி வைத்துள்ளது. அதன் மூலம், இனப்பிரச்சினைக்கு எந்தவித முடிவும் கேட்கவும் இல்லை. எனவே, கிடைக்கவும் இல்லை.

அதுவே நாடாளுமன்றத் தேர்தலாக இருந்தால், தமிழ்க் கட்சிகளின் ஆதரவு இன்றி, அரசு அமைக்கும் வாய்ப்பும் வசதியும், தற்போதைய ஜனாதிபதி கோட்டா பயவிற்கு கிடைத்தது போன்றே, அவரை முழுமூச் சாக எதிர்க்கும் ஒரு வேட்பாளரை, தென்னிலங்கையே முடிவு செய்து தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். அது சஜித் பிரேமதாஸாவாக இருக்கலாம். வேறு ஒருவராக இருக்கலாம். யாராக இருந்தாலும், அவர் தென்னி லங்கை வாக்காளர்களின் மனம் கோணாமல் மட் டுமே பிரசாரம் செய்வார் என்று எதிர்பார்க்கலாம். அதாவது, இனப்பிரச்சினைக்கு தீர்வாக யாழ்ப்பாணத் தில் கூறுவதை, அனுராதபுரத்திலும், கண்டியிலும் கொழும்பிலும் பேச மாட்டார்கள்.



அதிலும் குறிப்பாக, ராஜபக்ஷக்களை எதிர்க்கும் ஒரு ஜனாதிபதி வேட்பாளர் அல்லது பிரதமர் வேட்பா ளர், தென்னிலங்கை இனவாத வாக்காளர்களுக்கு சந்தேகம் விளைவிக்கும் வழியாக ஒரு பேசுபொருளாக மாற விரும்பமாட்டார். இதுவே இனப்போருக்கு பிந் தைய காலகட்டத்தில் அரங்கேறி வந்துள்ளது. நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமையில், அவர்களது அத்தகைய நிலைப்பாடு மேலும் உறுதியாகும்.

**வாய்சொல் வீரர்கள்**

உள்நாட்டு நிலைமை இவ்வாறானால், சர்வதே சத்தில், தமிழர் ஆதரவு என்று மார்தட்டிக் கொள்ளும் அமெரிக்கா போன்ற மேலை நாடுகளின் உக்ரைன் போர் குறித்த நிலைப்பாடு, அவர்கள் வெறும் வாய்சொல் வீரர்கள் மட்டுமே என்ற எண்ணத்தை தோற்றுவித் துள்ளது. அதனை, கடந்த இரண்டு வாரங்களாக, உக் ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி வெளிப்படையாகப் பேசி வருகிறார்.

உக்ரைன் போரில், ரஷ்யா தோல்வி அடைந்து, அதில் அமெரிக்கா போன்ற மேற்குலகின் நேரடி பங் களிப்பும் இருந்தால் மட்டுமே, அவர்கள் தாங்கள் இழந்துவிட்ட கௌரவத்தை ஓரளவாவது சரிகட்டிக் கொள்ள முடியும். அது வரை, உலக அரங்கில், மேற் குலகம் தங்களது அரசியல் மற்றும் இராணுவ வலிமை யைக் காட்டி, இலங்கை உள்ளிட்ட எந்த நாட்டையும் மிரட்ட முடியாது என்பதே உண்மை.

அதுவும் இல்லாமல், தற்போது ஜெனிவாவில் அரங் கேறி வரும் ஐ.நா. மனித உரிமை பேரவை விவாதத் தில் பங்கெடுத்த 45 நாடுகளில 31 இலங்கை அரசிற்கு ஆதரவாக பேசியுள்ளன என செய்திகள் தொவிக்கின் றன. இதன் பொருள், இந்த நாடுகள் தனக்கு ஆதரவாக பேசுவதற்கான இராஜதந்திர முன்னெடுப்புகளை அரசு செய்துள்ளது. அதற்கு பலன் கிடைத்துள்ளது.

ஆனால் இந்த நாடுகள் அனைத்துமே, தெற்குல கின் பிரதிநிதிகள் என்று சிங்கள - ஆங்கில பத்திரி கைகள் பிரசாரம் செய்வதை தமிழர் தலைமைகள் உதறி தள்ளி விடக்கூடாது. அதாவது, இனப்பிரச்சினை யில், மேற்குலகு, தெற்குலகு என்று உலகை பிரித்த பெருமையை இலங்கை அரசும், தமிழர் தரப்பும் ஒரு சேர்ந்து பெற்றுக் கொண்டுள்ளன.

இந்த 31 நாடுகளும் இந்த முறை வாக்களிக்கும் 47 நாடுகளின் பட்டியலில் இடம் பெறவில்லை. என் றாலும், அவர்களது எண்ணவோட்டத்தை ஒட்டி வாக்க ளிப்பு இருந்தால், தமிழர் தரப்பு அதிர்ச்சி அடையக் கூடாது. இந்த பின்னணி நிலையில், அரசிற்கு மேலும் அழுத்தம் கொடுக்கும் விதத்தில், புதிய ஒரு தீர்மானத்தை பேரவையின் இந்த அமர்வில் மேற் குலக நாடுகள் முன்னெடுக்குமா என்பது கேள்விக் குறியே.

மனித உரிமை பேரவை உள்ளிட்ட ஐ.நா. தொடர் புடைய பல்வேறு அங்கங்களிலும், வாக்களிக்கும் நாடுகளின் எண்ணிக்கை மாறுவதில்லை. ஆனால், அந்த நாடுகள் சுழற்சி முறையில் தேர்ந்தெடுக்கப் படுகின்றன. அந்த விதத்தில், கடந்த காலங்களில், தமிழர் ஆதரவு நிலைப்பாடு எடுக்கும் நாடுகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. அதுவும் கூட, அமெரிக்காவின் ஆளுமைக்கு அடிபணியும் நாடுக ளின் எண்ணிக்கை என்றே கூற வேண்டும். தற்போது, உக்ரைன் போர் இல்லாமலே, நிலைமை தலைகீழாகி விடுமோ என்ற ஐயப்பாடு எழுகிறது.

அவ்வாறான ஒரு நிலை தோன்றுமேயானால், அது மாறும் வரை பொறுமை காக்க வேண்டும் என்று மேற்குலகு அறிவுறுத்தினால், அதனை தமிழர் தரப்பு ஏற்றுக்கொள்வதை தவிர வேறு வழியில்லை. இதுவே, ஒரு காலச் சக்கரமாகச் சுழன்று கொண்டே இருக்கும். இடைப்பட்ட காலத்தில், உள்நாட்டில் மேற்குலகின் ஆதரவு பெற்ற ஓர் அரசு உருவாகுமேயானால், அமெ ரிக்கா, தொடர்ந்து அமைதி காக்கும்படி, தமிழர் தரப்பை வலியுறுத்தும். ஆனால், தமிழ் மக்களுக்கு நியாய மான அரசியல் முடிவுகளை வழங்கும்படி, அத்தகைய புதிய அரசை மேற்குலகு வலியுறுத்தாது. இதுவே, முந்தைய மைத்திரி - ரணில் அரசு காலத்தில், தமிழ் மக்கள் கற்றறிந்த பாடம்.

**எதற்கு முன்னுரிமை?**

இவை போதாது என்று, எதிர்பார்த்தபடியே, கார்தி னல் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் ஜெனிவா மனித உரிமை பேரவையில், உயிர்த்த ஞாயிறு தொடர் குண்டு வெடிப்பு சம்பவம் குறித்து, நேரடியாகவே சென்று பிரச்சினை எழுப்பி உள்ளார். கார்தினல் போன்ற மதம் சார்ந்த உயர் பதவி வகிக்கும் ஒருவர் அந்த அவையில் நேரடியாக கலந்து பங்களிப்பது இதுவே முதல் முறையாக இருக்கலாம்.

குறிப்பாக, ரஞ்சித் ஆண்டகை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல், ஒரு பெரிய அரசியல் சதி என்று மனித உரிமை பேரவையில் அறிவித்துள்ளார். தாக்குதல் நடந்த காலகட்டத்தில், இது போன்று வேறு சிலர் கருத்து தெரிவித்திருந்தனர். ஆனால், அதனை கார்தி னல் ஏற்றுக்கொண்டவராகக் கூற முடியாது. ஆனால், தற்போது அவரே அந்தக் குற்றச்சாட்டை முன் வைத்தி ருக்கிறார்.



இப்போது கேள்வியே, மேற்குலக நாடுகள், இனப் பிரச்சினை மற்றும் கார்தினல் ரஞ்சித் ஆண்டகையின் குற்றச்சாட்டில் எதற்கு எதிர்வரும் காலங்களில் முக் கியத்துவமும் முன்னுரிமையும் கொடுக்கப் போகின் றன என்பதுதான். அந்த வகையில் கார்தினலின் குற் றச்சாட்டுகள், இலங்கை அரசு குறித்து தமிழர் தரப்பு முன் வைத்துள்ள பழைய குற்றச்சாட்டுகளுக்கு வலு சேர்க்கும் ஆதாரம் என்று எடுத்துக் கொள்ளப் போகின் றனவா அல்லது அதனையே ஒரு தனி குற்றச்சாட்டாக நிலை நிறுத்திச் செயல்பட போகின்றனவா என்பதே முக்கியமானதாகின்றது.

முன்னது என்றால், தமிழ் மக்களின் போர்க் குற் றங்கள் மற்றும் பொறுப்புக் கூறல் உள்ளிட்ட கோரிக் கைகளுக்கு அது வலு சேர்க்கும். இதுவே. கார்தினலின் குற்றச்சாட்டுகளை தனியாக முன்னெடுத்தால், மேல் கூறியவற்றுக்கு அப்பால் சென்று, மேற்குலகு, அவரது கருத்திற்கும் கவலைகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்துச் செயலாற்றும் என்று எதிர்பார்க்கலாம். அவ்வாறாகும் பட்சத்தில், தமிழர் தரப்பின் குற்றச்சாட் டுகள் எல்லாம், சாட்சியங்களாக (மட்டுமே) மாறும் வாய்ப்பும் உள்ளது.

(10ஆம் பக்கம் பார்க்க)

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்

# மகிழ்வோடு வாழப் பழகுவோம்!



அன்பானவர்களே! எப்போதும் சிரித்த முகத்தோடு இருந்து பாருங்கள்.

உங்கள் முகத்தில் அப்படி ஒரு பிரகாசம் மலர்ந்திருக்கும்.

புன்முறுவல் பூத்த முகம், முகத்துக்கு உரியவருக்கு மட்டுமல்லாமல் அதைக் காண்கின்றவர்களுக்கும் மன மகிழ்ச்சியைக் கொடுக்க வல்லது.

உங்களின் புன்முறுவல் பூத்த முகம் நிச்சயமாக மற்றவர்களையும் உங்களை நேசிக்கச் செய்யும்.

அன்பானவர்களே! நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கிறேன்.

எந்த நேரமும் சினந்துகொண்டு, முகத்தைச் 'சிடு சிடு' என்று வைத்திருக்கும் ஒரு நபரை நீங்கள் நேசிப்பீர்களா அல்லது அவரோடு பேசுவதற்கு விருப்பந்தான் கொள்வீர்களா?

இல்லைத்தானே!

ஏனென்றால் அது எவருக்கும் பிடிக்காத ஓர் அணுகுமுறை.

அதுபோலத்தானே நீங்களும் மலர்ந்த முகத்தோடு இல்லாவிட்டால் உங்களை நேசிக்கின்றவர்களுக்கும் அது பிடிக்காமல் போகும்.

நீங்கள் சிரிக்கும்போது மற்றவர்களையும் சந்தோசப்படுத்துகிறீர்கள்.

நீங்கள் சக மனிதர்களைப் பார்த்துப் புன்னகைக்கும்போது பதிலுக்கு அவர்களும் புன்னகைப்பார்கள்.

நீங்கள் மற்றவர்களை மகிழ்விக்கும்போது நீங்களும் மகிழ்ச்சியாக இருக்கின்றீர்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை.

'சிரியுங்கள் உலகமே உங்களுடன் சிரிக்கும் – அழும்போது நீங்கள் தனியாகவே அழ வேண்டும்' என்பது ஒரு பிரபலமான பழமொழி.

அன்பானவர்களே! இந்தப் பழமொழி எங்கள் அனைவருக்கும் ஒரு செய்தியைச் சொல்கிறது.

சிரிப்பதிலே பங்கெடுக்க விரும்பும் உலகம் – துன்பத்திலே பங்கெடுப்பதை விரும்பவில்லை என்பதுதான் அந்தச் செய்தி.

ஆக, இந்த உலகத்தில் எல்லோரும் மகிழ்வோடு இருக்கத்தான் விரும்புகிறார்கள் என்பதை முதலிலே புரிந்துகொள்ள வேண்டும்.

யாருமே இந்த உலகத்திலே துன்பத்தை அனுபவிக்க விரும்பவில்லை.

அப்படியானால் அழுவதா, சிரிப்பதா வாழ்க்கைக்கு உகந்தது என்ற முடிவை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

சிரித்து வாழ்ந்தால் மகிழ்வோடு வாழலாம்.

நாம் மகிழ்வோடு வாழ்ந்தால் எம்மோடு இருப்பவர்களின் மன நிலையையும் அது சிறப்பாக வைத்துக்கொள்ளும்.

புன்னகையால் அனைவரும் இந்த உலகை ஆளலாம்.

இந்த உலகமே மகிழ்வோடு வாழப் புன்னகை அவசியம்.

அன்பானவர்களே! நாமும் சிரித்து வாழ்வோம் – சிறப்போடு வாழ்வோம் – மகிழ்வோடு வாழ்வோம்.

– குணரட்ணம் சுதாகரன் –
(அபிவிருத்தி உத்தியோகத்தர், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், நாவலர் மணி மண்டபம், நல்லூர்)

# கோளறு பதிகம்



**பாடல் - 05**

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடு உருமிடியும் மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

பொழிப்பு :–

பெருங்கருணை கொண்டு, இந்த அண்ட சராசரத்தைக் காக்கவெனக் கொடிய ஆலகால வித்தை, அமிர்தம் போல் உருட்டி விழுங்கி, நீலமணி பதித்த ஆபரண அணிபோல் உள்ள கழுத்தை உடையவரும், உமையம்மையைப் பக்கத்திலே வைத்து வெள்ளை எருதின் மேல் ஏறி, பவனி வருபவரும், எந்த உயிர் பிரிந்தாலும் ஆத்மாவானது முதலில் ஒரு குறிப்பிட்ட காலம் வரை, வன்னி மரத்தினுள் ஒடுங்கி இருக்கும் என்பதால், அது என் ஆளுகைக்குள்ளேயே, என் பார்வையிலேயே இருக்கும் என்பதைக் காட்ட அடர்ந்த கரும்பச்சை வன்னி இலைகளையும் நெருப்புச் சுடர்களைப் போன்ற கொன்றை மலர்களையும் திருமுடிமேல் அணிந்துகொண்டே சதாசிவனார் என் உள்ளமெனும் மாளிகையிற் குடிபுகுந்து இருப்பதனால், கடுங்கோபமுடைய அசுரர்களும் அச்சம், பயம் தருகிற இடியுடன், மின்னலும் பேய், பூதம் என்று நம்பப்படும் அவற்றோடு, பஞ்ச பூதங்கள் என்றழைக்கப்படும் நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகியன அளவுக்கு மிக அதிகமாகி, வெள்ளப் பெருக்காயும் ஆழிப் பேரலையாயும், நிலநடுக்கம், பூகம்பம், எரிமலை என்றாகியும் புயல், சூறாவளி என ஆகியும் அதி கனமழை அடாது பெய்வதாகியும், கொடுந்தீயாக மாறித் தகித்தெடுக்கும் போதும் எம் சிவனடியார்களைப் புரட்டி எடுக்காமல் அஞ்சி, அடங்கி, ஒடுங்கி நல்லன, நல்லன, மிகமிக நல்லனவே செய்யும்.

ஓவியமும் விளக்கமும் : பத்மவாசன்

(இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீட்டிலிருந்து...)

# நல்லைக் கந்தன் கழற்கோர் கவிமாலை



தானதன தான தன்ன தானதன தான தன்ன
தானதன தான தன்ன - தனதான

கயிலாய வாகனம தொயிலாக ஏறிசிவ
மயமாக வேயருள - வருவேலா
கயிலாய மேரையசை புயவீர தோளரைய
கடிதூணு பாதசிவ - னருள்பாலா
மயிலேறி யேயுலவி வருவேல னேகயிலை
மலைமீதி லேயமரு - முணர்வுற
மையலான மாதரிரு புறமாக வேயசைய
மருகாவு லாசமொடு - வருவோனே
புயலான சுரனுளம் மையலாக ரூபமதை
பொலிவாக வேபுனையு - புயவீரா
புவிமாயை யாலுனது பதமேதொ ழாதலையு
புலையேனும் வாழவருள் - புரியாயோ
தயவாக வேயமரு சிவனாரி னாவலது
தகைவாக வேசெவியி - லுரைநாதா
திசையாவு மேபுகழு மணிமாட கோபுரமுள்
திருவேநல் லூரிலுறை - பெருமானே

– கவிஞர் இராசையா குகதாசன் –

# வாரம் ஓர் ஆசனம்

## வஜ்ராசனம

(கணுக்காலின் மீது அமர்ந்த நிலை)



**செய்(படி)முறைகள்:**

1) நேராக நிமிர்ந்து உட்கார்ந்து இரு கால்களையும் நேராக நீட்டவும். பாதங்களிரண்டும் இணைந்திருக்க வேண்டும். உள்ளங்கைகளை புட்டப் பகுதியின் இரு பக்கங்களும் தரையில் வைக்கவும்.

2) வலக்கையின் உதவியால் வலக்காலை மடக்கி வலது புட்டத்துக்குக் கீழ் வைக்கவும்.

3) இடது காலை இடக்கையின் உதவியால் மடக்கி இடது புட்டத்துக்குக் கீழ் வைக்கவும். முழங்கால்களிரண்டும் இணைந்திருக்கத் தக்கவாறு உள்ளங்கைகளைத் தொடைகளின் மீது வைக்கவும்.

4) உடலின் முழுப்பாரமும் குதிக்கால்களின் மீது இருக்குமாறு நிமிர்ந்து இருந்தபடி கண்களை மூடி ஆழமாக சுவாசிக்கவும்.

5) பின்னர் இடது காலையும் வலது காலையும் விடுவித்து நீட்டி ஆரம்ப நிலைக்கு வரவும்.

**பலன்கள்:-** காலிலுள்ள எல்லா மூட்டுக்கள் மற்றும் தசைகளை தளர்த்துகிறது. வயிற்றுப்புற பகுதிக்கு அதிக இரத்த ஓட்டம் கிடைக்கிறது. உடல் பலமடைகின்றது. மனம் அமைதியடைகின்றது. இரப்பை, குடல் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு நல்லது. இடுப்பு வலி, வாயுப் பிரச்சினை, சமிபாட்டுப் பிரச்சினை, இரத்த அழுத்தம், மூலவியாதி, மலச் சிக்கல் முதலியவற்றுக்குச் சிறந்த ஆசனம். உடல் பலமாகி மனவலிமை, மன உறுதி உண்டாகும். பாதங்கள், கணுக்கால்கள், இடுப்பு, தொடைகள் அவை சார்ந்த தசைகள், எலும்புகள் என்பன பலம் பெறுகின்றன.

- ஸ்ரீ. நதிபரன் - (யோகா போதனாசிரியர், நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்)

# அத்துமீறும் பௌத்த பிக்குகள் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்களா?

## கேள்வியெழுப்புகிறது அம்பாறை சட்டத்தரணிகள் சங்கம்

(நூருல் ஹுதா உமர்)

இனவாதத்தால் இலங்கை இன்று சுக்குநூறாக உடைந்து சர்வதேசமளவில் விலாசமிழந்து இருக்கும் இவ்வாறான நிலையில் இலங்கை முஸ்லிங்களை மீண்டும் மீண்டும் சீண்டும் செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

பலாங்கொட கூரக்கல ஜெய்லானி எனும் இடத்தில் முஸ்லிங்களின் 800 வருடங்களுக்கு மேற்பட்ட அடையாள சின்னங்கள் திட்டமிட்டு பிக்குகளால் அழிக்கப்பட்டுள்ளன. அங்கு பாரிய விகாரைகள் அமைக்கப்பட்டு வருகின்றமையை முஸ்லிம்கள் அறியாமலில்லை. தெரிந்து கொண்டும் எமது நாட்டில் அநாவசியமான முரண்பாடுகளை உருவாக்கக் கூடாது என எண்ணி முஸ்லிம்கள் அமைதி காத்து இருக்கின்றனர் என சம்மாந்துறை சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் சங்கத் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி யூசுப் அன்வர் ஸியாத் வெளியிட்ட கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குட்பட்ட பாலமுனை முள்ளிமலை பிரதேசத்தில் உள்ள காணியில் புத்தர் சிலையொன்றை நிறுவ பௌத்த பிக்குகளும், சிங்கள இளைஞர்கள் சிலரும் கடந்த புதன்கிழமை எடுத்த முயற்சியால் அந்த பிரதேசத்தில் பதற்றம் நிலவியிருந்தது. இந்த விடயம் தொடர்பில் வெளியிட்ட கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

பிக்குகளைத் தொடர்ந்தும் தூண்டிவிட்டு முஸ்லிம் பிரதேசங்களுக்குள் இரவோடிரவாக வயல், காடு, மேடு, மலைகளில் பௌத்த சிலைகளை வைக்கும் செயற்பாடுகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. பொலிஸாரால் அல்லது அரசால் கட்டுப்படுத்த முடியாதளவிற்கு பிக்குகள் சட்டவரையறைகளுக்கு அப்பாற்பட்டவர்களா? இலங்கை சட்டம் இவர்களுக்கு உரித்தாகவில்லையா எனக் கேள்வியெழுப்ப எண்ணுகின்றோம். இது இலங்கையர்கள் எல்லோருக்கும் மத்தியில் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தும் அம்சமாக உள்ளது.

மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டை முன்வைத்து ஜெனிவாவில் நிறுத்தப்பட்டிருக்கும் எமது நாடு, இவ்வாறான அத்துமீறல்களைக் கண்டும் காணாமல் இருப்பது நாட்டின் எதிர்காலத்துக்கு ஆரோக்கியமாக அமையாது. இப்படியான அத்துமீறல்களைச் செய்தவர்கள் மீது சரியான சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துவதுடன் முஸ்லிங்கள் அல்லது வேறு சமூகங்களை சீண்டிப்பார்க்கும் விடயங்களைப் பௌத்த சாசன அமைச்சு அனுமதிக்காது உடனடியாக இந்த விடயங்களில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

# வவுனியாவில் கடும் பனி!

வவுனியாவில் நேற்று (வியாழக்கிழமை) காலை அதிகளவான பனி மூட்டம் காணப்பட்ட நிலையில் சாரதிகள் வாகனங்களை செலுத்துவதில் பெரும் இடையூறுகளைச் சந்தித்திருந்தனர்.

வவுனியா நகர்ப்புறம் உட்பட அனைத்து இடங்களிலும் காலை 8 மணிவரை அதிகளவான பனி மூட்டம் காணப்பட்டது. இதன் காரணமாக வேலைக்குச் செல்வோர், பாடசாலை மாணவர்கள், வாகன சாரதிகள் எனப் பலரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

ஏ –9 வீதி, மன்னார் வீதி உட்பட வவுனியாவில் வீதியால் சென்ற வாகனங்கள் காலை 8 மணிவரை ஒளியைப் பாய்சிய படி சென்றமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

அதிக குளிருடன் பனி மூட்டம் ஏற்படும் காலநிலை நுவரெலியாவில் நிலவும் நிலையில் தற்போது வவுனியாவிலும் உணரப்பட்டுள்ளது. (100)



# இன அரசியல் இன்னும் .........

**மேற்குலகு சாராமல்...**

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த பின்னணியில், தமிழர் தரப்பின் சர்வதேசம் சார்ந்த நம்பிக்கைகளுக்கு வலு ஊட்டும் சக்தி, நாட்டின் தற்போதைய பொருளாதார பிரச்சினைகளுக்கே உள்ளது எனலாம். அரசு என்ன சொல்லி வந்தாலும், மேற்குலகு சாராமல் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுதலை கிடைக்கப் போவதில்லை என்பதே உண்மை.

இது தொழில் துறையில் அன்னிய முதலீடு மற்றும் ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகத்தில் சலுகைகள் என்ற விதத்திலேயே அமையும். என்றாலும், இடைப்பட்ட காலத்தில், அமெரிக்கா போன்ற மேற்குலகு சார்ந்த - சர்வதேச நாணய நிதியம் மாதிரியான நிறுவனங்களில் இருந்து பெருமளவில் கடன் பெற்றால் மட்டுமே, இலங்கை அரசால், அன்னிய செலவாணி நிலைமையை தூக்கி நிறுத்த முடியும் என்பதே உண்மை.

இல்லையென்றால், சீனாவிடம் மீண்டும் கையேந்த வேண்டும். அவர்கள் விரும்புவது போல் அம்பந்தோட்டை போன்ற நாட்டின் ஏதாவது ஒரு பிரதேசத்தை பிறிதொரு காலத்தில் கையளிக்கத் தயாராக இருக்க வேண்டும். குறிப்பாக, வீரவன்ஸ, கம்மன்பில வகையறாக்கள் இந்த அரசிற்கு எதிராகத் திரும்பிய பின்னர் அவ்வாறு செய்வது அரசியல் தற்கொலைக்குச் சமம். மேலும், சீனாவிற்கும் தற்போது இலங்கைக்கு மிகப் பெரிய அளவில் நிதி உதவி செய்வதில் விருப்பம் இல்லை என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அந்த வகையில், இலங்கைக்கு நிதி உதவி செய்வதென்றால், அதற்கான அரசியல் மற்றும் சட்டம் – ஒழுங்கு சூழல் நிலவ வேண்டும் என்று மேற்குலகு அழுத்தம் கொடுக்கலாம். ஜெனிவாவில், அமெரிக்கப் பிரதிநிதியின் கூற்றின் சாராம்சமும் இதுவே. என்றாலும், உள்நாட்டில், பேச்சுவார்த்தை மூலம் இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும் என்று வலியுறுத்திய அமெக்கா, அதனை பொருளாதார உதவிகளுடன் முடிச்சுப் போடவில்லை என்பதே உண்மை. அதற்கான, இடமும், காலமும் அதுவல்ல என்பதும் உண்மையே.

சூழ்நிலை இவ்வாறிருக்க, தமிழ் தரப்பு தொடர்ந்து இல்லாத ஊருக்கே வழி தேடி வருமாயின், அடுத்த தலைமுறை மக்கள் மட்டுமல்ல, அந்த தலைமுறைகளின் தமிழர் அரசியல் தலைமைகளும் கூட வெவ்வேறு பிரச்சினைகளில் தங்களது கவனத்தை செலுத்த துவங்கிவிடும். அது தற்போதே நிகழ துவங்கி உள்ளது. கடந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் கோடிட்டுக் காட்டியதும் அதுவே.

**காற்றுள்ள போதே...**

விடுதலை புலிகள் இயக்கம் ஆகட்டும், அதற்கு முன்னரும் பின்னருமான மிதவாத தமிழர் அரசியல் தலைமைகள் ஆகட்டும், இரு தரப்பினருமே காற்றுள்ள போதே தூற்றிக் கொள் என்ற பழமொழியை அறிந்ததில்லை. காரணம், தங்களுக்கு மட்டும்தான் பிரச்சினை, தாங்கள் மட்டுமே அறிவாளிகள் என்ற நினைப்பு அவர்களுக்கு நாடு சுதந்திரம் அடைவதற்கு முற்பட்ட கால கட்டத்தில் இருந்தே தொடர்ந்து வருகிறது. இதன் காரணமாகவும், சர்வதேச சமூகத்தை தாங்கள் பயன்படுத்துவதை விட, அதுவே தங்களை உள்நாட்டு அரசியலில் பகடை காயாய பயன்படுத்தி வருவதை கூட அவர்கள் உணரவில்லை.

இந்திய – இலங்கை ஒப்பந்த காலத்தில் பதிமூன்றாம் திருத்த சட்டத்தை இந்தியா பிரேரித்ததே, அது இனப் பிரச்சினைக்கான முழு தீர்வையும் வழங்கும் என்பதால் அல்ல. மாறாக, அதனை ஒரு துவக்கமாக பயன்படுத்தினால், அதுவே சிங்கள தரப்பினருக்கும் அன்றைய காலகட்டத்தில் ஏற்புடையதாக இருக்கும் என்பதால் தான். அன்று மட்டும், குறிப்பாக விடுதலை புலிகள் இயக்கம் இந்தியாவின் தீர்வு திட்டத்தை ஏற்று செயல்படுத்த அழுத்தம் கொடுத்திருந்தால், இன்று கூட்டமைப்பு கேட்கும் பதிமூன்றிற்கும் அப்பால் நிலைமை தானாகவே தோன்றி இருக்கும். தென்னிலங்கை அரசியல் தலைமைகளும் அதனை ஏற்றுக் கொண்டிருக்கும்.

இவை அனைத்தையும் விட, இனப் போர் இத்தனை தூரம் அழிவுகளையும் நாசங்களையும் விளைவித்திருக்க முடியாது. ஏன், இந்திய – இலங்கை ஒப்பந்த கால கட்டத்தில், பிரபாகரனே கூட, ஒன்றிணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்தின் முதல்வராக பதவியேற்று, இன்றும் தமிழ் மக்கள் மனதில் மட்டுமல்ல, உயிருடனும் வாழ்ந்திருப்பார். இதன் காரணமாகவும், தமிழர் தரப்பின் பழைய குருடி, கதவைத் திறடி, என்ற தொடர்ந்து பிழை விடும் காலமும் முடிவிற்கு வந்திருக்கலாம்!

# சமையல் எரிவாயு தட்டுப்பாடு ஒரு வாரம் வரை நீடிக்குமாம்!



நாட்டில் நிலவும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு மேலும் ஒரு வாரம் வரை நீடிக்கும் என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

நாட்டை வந்தடைந்துள்ள கப்பலில் இருந்து எரிவாயுவைத் தரையிறக்குவதற்கான நடவடிக்கை நேற்றும் (வியாழக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னதாக நாட்டை வந்தடைந்த 2 ஆயிரத்து 600 மெற்றிக் தொன் சமையல் எரிவாயு தாங்கிய கப்பலில் இருந்து, சமையல் எரிவாயுவைத் தரையிறக்கும் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய நாளாந்தம் 900 மெற்றிக் தொன் சமையல் எரிவாயுவை நாடு முழுவதிலும் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

சமையல் எரிவாயு மற்றும் மின் துண்டிப்பு காரணமாக நாட்டின் பல பகுதிகளில் இயங்கிய பெரும்பாலான உணவகங்கள் மூடப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நியூ போட்ரஸ் எனர்ஜி நிறுவனம் வேலைத்திட்டம் ஆரம்பிக்க முடிவு

திட்டமிட்டபடி, இலங்கைக்கு எல்.என்.ஜியை வழங்கும் திட்டத்தை நியூ போர்ட்ரஸ் எனர்ஜி நிறுவனம் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

யுகதனவி ஒப்பந்தத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை உயர் நீதிமன்றம் மார்ச் 04ஆம் திகதி தள்ளுபடி செய்தது தொடர்பாக நியூ போட்ரஸ் எனர்ஜி நிறுவனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனை அறிவித்துள்ளது.

கொழும்பிற்கு அருகில் எல்.என்.ஜி. முனையத்தை நிர்மாணிக்க நியூ போர்ட்ரெஸ் எனர்ஜி நிறுவனமும் இலங்கை அரசாங்கமும் செப்ரெம்பர் 2021 இல் ஒப்பந்தம் செய்து கொண்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோல், கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலைய வளாகத்துக்கு எரிவாயு விநியோகிக்கும் உரிமையும் நியூ போர்ட்ரெஸ் எனர்ஜி நிறுவனத்துக்கு இருக்கும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, முதலில் நாள் ஒன்றுக்கு அரசாங்கத்துக்கு 1.2 லட்சம் திரவ எரிவாயுவை நியூ போட்ரஸ் எனர்ஜி நிறுவனம் வழங்கத் தீர்மானித்துள்ளது.

இதன் மூலம் தற்போது இயங்கி வரும் யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தில் 310 மெகாவோட் மின் உற்பத்தியும் மற்றும் சோபதனவி மின் நிலையத்தில் கூடுதலாக 350 மெகாவோட் மின் உற்பத்தியும் இடம் பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈ - லைபெறி நூலகசேவை இரத்தினபுரியில் ஆரம்பிப்பு



இரத்தினபுரி பிரதேச சபையின் நூலகத்தின் ஈ - லைபெறி நூலக சேவை சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் ரஞ்ஜித் பண்டார, இரத்தினபுரி பிரதேச சபை தலைவர் சுதத் திசாநாயக்க, மாகாண பிரதான செயலாளர் சுனில் ஜயலத் உட்பட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# சபரிமலை
# ஸ்ரீ ஐயப்பன் ரேடர்ஸ்

## Sabarimalai Sri Iyappan Traders

இல.315, கண்டிறோட்,
கிளிநொச்சி.

No. 315, Kandy Road,
Kilinochchi.

**Tel:- 021 228 3701,076 307 8091**




விசேட நிகழ்வுகளுக்கும், வியாபார நிலையங்களுக்கும் இலவச Delivery - அனைத்துத் தேவைகளுக்கும்

**077 986 2476 - 077 983 8091** எனும் இலக்கங்களுக்கு வரும் ஓடர்களுக்கு சலுகை வழங்கப்படும்.

**076 307 8091, 021 228 3701, 077 986 2470**

# அரச ஊழியர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு நிறுத்தும் சுற்றறிக்கையை மீள்பரிசீலனை செய்க!

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. வலியுறுத்து



அரச ஊழியர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் எரிபொருள் கொடுப்பனவை நிறுத்தும் சுற்றறிக்கையை அரசாங்கம் மீள்பரிசீலனை செய்ய வேண்டும் எனக் கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் நாடாளுமன்ற அமர்வின் போதே இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அரச உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த விசேட எரிபொருள் கொடுப்பனவுகள் முற்றாக நிறுத்தப்படுவது தொடர்பான சுற்றறிக்கையை பொது நிர்வாக அமைச்சு வெளியிட்டுள்ளது. அரச ஊழியர்கள் என்பவர்கள் மக்கள் சேவையாளர் கள். அவர்கள் பல்வேறு நெருக் கடிகளுக்கு மத்தியிலேயே மக் கள் சேவை புரிகின்றனர் என சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித் துள்ளார்.

எனவே அரச உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த விசேட எரிபொருள் கொடுப்பனவுகள் முற்றாக நிறுத்தப்படுவது தொடர்பான அறிவிப்பு அரச ஊழியர்களுக்கு பெரும் சுமையாகவும் ஏமாற்றமாகவும் மாறியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆகையால் அரச ஊழியர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் எரிபொருள் கொடுப்பனவை நிறுத்தும் பொது நிர்வாக அமைச்சு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையை அரசு மீள்பரிசீலனை செய்ய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள் ளார்.



# இலங்கை மின்சார சபையின் ஜிரி–7 இன் ஒற்றை மின்னுற்பத்தி அலகு மூடப்பட்டது!

களனிதிஸ்ஸ அனல்மின் நிலைய வளாகத்திலுள்ள இலங்கை மின்சார சபையின் ஜிரி–7 இன் ஒற்றை மின் உற்பத்தி அலகு மூடப்பட்டுள்ளது.

டீசல் இல்லாத காரணத்தால் நேற்று(வியாழக்கிழமை) காலை திடீரென மூடப்பட்டதாக இலங்கை மின்சார சபையின் பேச்சாளர் தெரிவித்தார்.

ஜிரி–7 ஆலையின் செயல்பாடுகள் காலை 7:21 மணிக்கு திடீரென நிறுத்தப்பட்டதாக அவர் கூறினார்.

அனல்மின் நிலையம் நிறுத்தப்பட்டதால், தேசிய மின்வாரியத்திற்கு 115 மெகாவாட் மின்சாரம் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஜயந்த சமரவீர இராஜாங்க அமைச்சர் பதவியை இராஜினாமா செய்துள்ளமை குறித்து வர்த்தமானி!



நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர, இராஜாங்க அமைச்சர் பதவியை இராஜினாமா செய்துள்ளமை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத்தின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர கடந்த சில தினங்களுக்கு முன்னர் தனது இராஜாங்க அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் ஜனாதிபதியால் அமைச்சு பதவிகளில் இருந்து நீக்கப்பட்டதன் பின்னரே, ஜயந்த சமரவீர தனது இராஜாங்க அமைச்சு பதவியை இராஜினாமா செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு நாவலர் ஆண்டில் கற்றல் உபகரணங்கள்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டிலே (2022) இளம் இந்துச் சிறார்களிடையே நாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக, யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் – மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை , செயற்திட்டத்தின்' ஓர் அங்கமாக மாணவர்களின் கற்றல் சூழலை மேம்படுத்தும் செயற்திட்டத்திற்கு அமைவாகக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வு கனடா ரொன்ரோ வதிவிடமாகக் கொண்ட சிவஸ்ரீ பால. திருகுணானந்தக்குருக்கள் அனுசரணையுடன் நடைபெற உள்ளது.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுகமைப்பில் மாதகல் சித்திவிநாயகர் அறநெறிப்பாடசாலை மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணிக்கு இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி கயிலநாயகி பரந்தாமன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கோப்பாய் கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி கலாநிதி பா.தனபாலனும் சிறப்பு விருந்தினராக இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி மா.அனந்தலட்சுமியும் கலந்து சிறப்பிப்பர்.

நாவலர் குருபூஜை, மற்றும் தலைமையுரை நிகழ்வுகளைத் தொடர்ந்து, ' நாவலர் பெருமானின் சமூகப்பணி ' என்னும் தொனிப்பொருளில் சைவப்புலவர் செ.த குமரன் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். தொடர்ந்து சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வும், அதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர் உரை, பிரதம விருந்தினர் உரை என்பன இடம்பெற்று. மாணவர்களின் கற்றல் சூழலை மேம்படுத்தும் செயற்றிட்டத்துக்கு அமைவாகக் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

தொகுப்புரையை இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி அகல்ஜா ஜனார்த்தனன் நிகழ்த்துவார்.

# எரிபொருளுக்கு டோக்கன் முறை!



எரிபொருள் பெற்றுக்கொள்ள டோக்கன் முறை கிளிநொச்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பொலிஸ் பாதுகாப்பு காணப் படுவதுடன் டோக்கன் நடைமுறையும் காணப்படு கின்றது.

அவ்வாறு டோக்கனன் பெற்றவர்களுக்கும் மாத்திரமே எரிபொருள் வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன் மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருளே வழங்கப்படுவதன் காரணமாக வாடகை வாகன சாரதிகள் நாளாந்தம் பல மணிநேரம் எரிபொருள் பெறுவதற்கு வரிசையில் நிற்கின்றனர்.

இதனால் தமது நாளாந்த வருமானம் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

# மாட்டுவண்டியில் மாதாந்த அமர்விற்குச்சென்ற கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர்கள்!







விஜயரத்தினம் சரவணன்

எரிபொருள் பற்றாக்குறையைக் கண்டித்து முல்லைத்தீவு – கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர்கள் மாதாந்த சபை அமர்விற்கு மாட்டுவண்டியில் சென்றனர்.

முள்ளியவளை காட்டாவிநாயகர் ஆலயத்தின் முன்றிலில் இருந்து இவ்வாறு சபை உறுப்பினர்கள் மூன்று மாட்டுவண்டிகளில் சபை அமர்விற்குப் புறப்பட்டிருந்தனர்.

குறிப்பாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கரைதுறைப்பற்று பிரதேசசபைத் தவிசாளர் க.விஜிந்தன், உபதவிசாளர் ம.தொம்மைப்பிள்ளை, உறுப்பினர்களான சி.லோகேஸ்வரன், தி.இரவீந்திரன், இ.கவாஸ்கர், க.தவராசா, இ.கஜீதரன், ஈழ மக்கள் ஜனாயகக்கட்சி உறுப்பினரான இ.ஜெகதீசன், தமிழர் விடுதலைக்கூட்டதியின் உறுப்பினர்களான த.அமலன், மோ.விக்கினா ஆகியோர் இவ்வாறு மாட்டு வண்டிகளில் சபை அமர்விற்குச்சென்றிருந்தனர்.

காலைக்கதிர் Kalaikkathir

### நாட்டின் நிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்ததாவது:-

நாட்டின் பொருளாதாரம் அதலபா தாளத்துக்குள்சென்றபின்னர்சர்வக்கட்சி மாநாட்டைக் கூட்டி இனி ஒன்றும் செய்ய முடியாது.

இந்த அரசு புத்திஜீவிகள் மற்றும் பொருளாதார விற்பன்னர்களின் ஆலோசனைகளைக் கேட்காமல் அதிகார மமதையில் ஆட்சி நடத்தியதால்தான் நாடு இப்படிச் சீரழிந்துள்ளது. இதை ஜனாதிபதியும் அவர் தலைமையிலான அரச தரப்பினரும் இன்னமும் புரிந்து கொள்ளாமல் செயற்படுகின்றனர்.

இந்த ஆட்சிக்கு ஆணை வழங்கிய 69 இலட்சம் பேர் உள்ளிட்ட அனைத்து மக்களும் இன்று வீதிகளில் பொருள்களை வாங்க வரிசையாக நிற்கின்றனர்.

பொருள்களின்விலையேற்றத்தாலும் பொருள்களின் பற்றாக்குறையாலும் மக்கள் இன்று திண்டாடுகின்றனர்.

எனவே, பட்டினியால் மக்கள் செத்து மடிவதற்கு முன் இந்த அரசு உடன் பதவி விலக வேண்டும். அப்போதுதான் நாட்டையும் மக்களையும் மீட்டெடுக்கும் வகையில் ஜனநாயக ஆட்சி மலரும் - என்றார்.

### நல்லாட்சியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தேசிய அரசமைக்கும் யோசனைக்கு எதிராகவும் அவர் கருத்து வெளியிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட மாநாடு நேற்று கொழும்பில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய மைத்திரிபால சிறிசேன,

அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைத்து, அரச செலவீனங்களைக் கட்டுப்படுத்த வேண்டிய சூழ்நிலையில், தேசிய அரசமைக்கும் யோசனை ஏற்புடையது அல்ல. இன்று அமைச்சுகளுக்குள் மோதல் இடம்பெறுகின்றது.

எமக்கு தேசிய வேலைத்திட்டமொன்றே அவசியம். அதனை முன்வைப்போம்.

நல்லாட்சி மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை அடியோடு நிராகரிக்கின்றோம் - என்றார்.

### இலங்கை - இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சமாசங்களின் சம்மேளன உபதலைவர் நா.வர்ணகுலசிங்கம் நேற்று தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளரிடம் கச்சதீவு செல்வதற்கான கோரிக்கைக் கடிதத்தைக் கொடுத்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே நா. வர்ணகுலசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கச்சதீவு திருவிழாவுக்கு இந்திய கடற்றொழிலாளர்களும் வருகிறார்கள் என்பதால் அமைச்சர் மட்டத்தில் பேசி இந்திய கடற்றொழிலாளர்களுடன் சிநேகபூர்வமாகப் பேச்சு நடத்த நாங்கள் தீர்மானித்தோம். அதனால் 10 கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளின் பெயர் விவரங்களை நாம் யாழ். மாவட்ட செயலாளரிடம் கையளித்துள்ளோம்.

கச்சதீவுக்குச் செல்வதற்கான மட்டுப்பாடுகள் காணப்படுவதால்தான் அனுமதி கேட்டுள்ளோம்.

அனுமதி கிடைக்கும்பட்சத்தில் கச்சதீவுக்குச் சென்று இந்தியக் கடற்றொழிலாளர்களுடன் ஒரு சிநேகபூர்வமான பேச்சு ஒன்றை நடத்தத் தயாராகவுள்ளோம்.

இந்தியக் கடற்றொழிலாளர்களும் இலங்கைக் கடற்றொழிலாளர்களும் பேச்சு நடத்தி எந்தவித ஒரு முடிவையும் எட்ட முடியாது.

இந்திய - இலங்கைக் கடற்றொழிலாளர் பிரச்சினைக்கு இரு நாட்டு அமைச்சர்களும் பேசியே ஒரு முடிவுக்கு வர வேண்டும் - என்றார்.

### பெற்றோலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேலும், ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 50 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது எனவும் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் தெரிவித்துள்ளது.

### தனிவழிப் பயணத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாவட்ட கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே நிமல் சிறிபாலடி சில்வா இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கென தனித்துவம் இருக்கின்றது. அடுத்து வரும் தேர்தலில் நாம் தனித்தே போட்டியிடுவோம். தேர்தலின் பின்னர் எமது கொள்கையை ஏற்பவர்களுடன் கூட்டணி அமைக்கலாம் - என்றார்.

### கோட்டா - சம்பந்தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தத் தகவலைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உறுதிப்படுத்தினார்.

ஜனாதிபதிக்கும் கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்பு குறித்து பல்வேறு சந்தர்ப்பங்களில் அறிவிப்புகள் வெளியாகி இருந்தபோதும், அவை நடைபெற்றிருக்கவில்லை.

இந்நிலையில், ஜனாதிபதி செயலகத்தால் இந்தச் சந்திப்பு குறித்த அறிவித்தல் நேற்றுமுன்தினம் கூட்டமைப்பின் தலைமைக்கு வழங்கப்பட்டது.

### அரச வேலையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒருங்கிணைப்பில், மாவட்ட மேலதிக அரச அதிபர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன் கலந்துகொண்டார்.

இதன்போது உரையாற்றிய யாழ். மாவட்ட அரச அதிபர்,

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தொழில் அற்றவர்களுடைய வீதம் சராசரியாக ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிடும் போது சற்று அதிகமாகக் காணப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இளைஞர், யுவதிகள் அரசதுறை வேலைவாய்ப்பை நாடுவதன் காரணமாகவே மாவட்டத்தில் தொழிலற்றவர்களுடைய எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதற்குப் பிரதானமான காரணம் பாடசாலைகளில் தொழில் வழிகாட்டி செயல்முறைகளை நாம் ஒழுங்காக ஏற்படுத்திய போதிலும் அதனை மாணவர்கள் சரியாகப் பின்பற்றாமையே பிரதானமான காரணமாகும்

நமது பெற்றோர்கள் மாணவர்களுக்குக் கல்வியைப் போதிப்பது மட்டுமல்லாது உரிய தொழில் வழிகாட்டி தொடர்பிலும் அக்கறையாகச் செயற்படுவதன் மூலம் எதிர்காலத்தில் எமது மாவட்டத்தில் வேலையற்றோரின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும் - என்றார்.

### யாழ்.நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வரிசையில் காத்திருந்தமையை அவதானிக்க முடிந்தது.

யாழ்ப்பாணம் - வைத்தியசாலை வீதியிலுள்ள கொட்டடிப் பகுதியில் அமைந்துள்ள எரிவாயு சிலிண்டர் களஞ்சியசாலைக்கு முன்பாக நேற்றுக் காலை முதல் எரிவாயு சிலிண்டர்களைப் பெற்றுக் கொள்வதற்கு எரிவாயு சிலிண்டர்களுடன் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

குடும்பப் பங்கீட்டு அட்டையுடன் மக்கள் வெயிலையும் பொருட்படுத்தாது அப்பகுதியில் நீண்ட வரிசையில் காத்திருந்த நிலையில், அப்பகுதியில் வாகன நெரிசலும் ஏற்பட்டது.

### மீனவருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தூதுவர் கோபால் பாக்லே யாழ்ப்பாணம் மீனவர்களிற்கு நிவாரணப் பொதிகளை சம்பிரதாயபூர்வமாக வழங்கி வைக்கவுள்ளார்.

சீன அரசாங்கம் வழங்கிய பொதிகள் 5 ஆயிரம் ரூபா பெறுமதியிலானவை என்பதனால் இந்திய அரசு 5 ஆயிரத்து 800 ரூபா பெறுமதியில் பொதியினை தயார் செய்துள்ளது.

# பயங்கரவாதச் சட்டத்தை முற்று முழுதாக நீக்குக!

**ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டை எழுத்து மூலம் சுமந்திரனிடம் நேற்று கையளித்த எதிர்க்கட்சித் தலைவர்**



பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முற்று முழுதாக நீக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் தமது கட்சியின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் எழுத்துமூல ஆவணத்தை எதிர்க்கட்சித் தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனிடம் நேற்று நேரில் கையளித்தார்.

இந்த விடயம் தொடர்பில் சுமந்திரன் எம்.பி. ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் நாம் கையெழுத்து வேட்டையை முன்னெடுத்து வருகின்றோம்.

இந்த நடவடிக்கைக்கு மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், கல்வியியலாளர்கள், அரசியல்வாதிகள், மதத்தலைவர்கள், மாணவர்கள் மற்றும் மூவின மக்கள் தங்கள் ஆதரவை வழங்கி வருகின்றனர்.

இந்நிலையில், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முற்று முழுதாக நீக்கப்பட்டு, சர்வதேச நியமங்களுக்கு ஏற்புடைய சட்டமொன்று அதனைப் பிரதியீடு செய்ய வேண்டுமென்ற தமது கட்சியின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் எழுத்துமூல ஆவணத்தை எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ, இன்று காலை என்னிடம் கையளித்தார்.

நாடாளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் வைத்து இந்த ஆவணத்தை அவர் என்னிடம் கையளித்தார்.

இதன்போது ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன், வேலுசாமி இராதாகிருஷ்ணன், பழனி திகாம்பரம், மயில்வாகனம் உதயகுமார் மற்றும் புத்திக பத்திரண ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர் - என்றார்.

## யாழில் ஆட்டத்தை ஆரம்பித்தார் கீதநாத்!

**ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களை உடனடியாகக் கூட்டுமாறு மாவட்ட அரச அதிபருக்குப் பிரதமர் அலுவலகத்திலிருந்து கடிதம்**

யாழ்ப்பாணம் மாவட்ட மற்றும் பிரதேச ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டங்களை உடனடியாகக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.மாவட்டச் செயலர் க.மகேசனுக்கு, பிரதமர் அலுவலகத்திலிருந்து நேற்றுமுன்தினம் கடிதம் அவசர அவசரமாக அனுப்பப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவுக்கு பிரதமர் அலுவலகப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள கீதநாத் காசிலிங்கத்தின் ஒப்பத்துடன் இந்தக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அதில், 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைத்திட்டத்தின் பிரகாரமும் 2022ஆம் ஆண்டுக்கான அரசின் வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் வினைத் திறனுடன் நடைமுறைப்படுத்தி உச்ச பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்காகவும் 2022ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டங்களின் அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதற்காகவும் பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை கிரமமாக நடத்துவதற்கான முக்கியத்துவத்தின் பால் தங்களின் மேலான கவனத்தை ஈர்க்கின்றேன்.

அதன் அடிப்படையில் 2022ஆம் ஆண்டிற்கான நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய வேலைத்திட்டங்களுக்கு ஒருங்கிணைப்புக்குழுவின் அனுமதி பெறுவதற்காக பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடத்துவதற்கு ஆவன செய்யுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது.

நாளை மறுதினம் யாழில் வழங்கப்படவுள்ள 660 பொதுகள் யாழ்ப்பாணம் கார்கில்ஸ் பூட் சிற்றியில் பொதி செய்யப்பட்டு கடற்றொழில் அமைச்சரின் சிறிதர் தியேட்டர் அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

### சாரதிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலத்தை மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரத்துக்குப் பாதுகாப்பான முறைகள் கொண்ட கணினி மென்பொருள் ஒன்றை பொலிஸ் திணைக்களத்துக்கு அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்தோடு, தற்போது வழங்கப்பட்டுள்ள தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு ஒரு வருட காலம் செல்லுபடியாகும் புதிய தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்றை உரிமையாளருக்குத்தபால்மூலம் அனுப்பிவைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், நிலைமை சீரானதன் பின்னர் உரிய அட்டை அச்சிடப்பட்டு விண்ணப்பதாரரின் வீட்டுக்கே நிரந்தர சாரதி அனுமதிப்பத்திரத்தை அனுப்பி வைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### அமெரிக்காவில் தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

*கலாநிதி. சிவயோகன் முன்னர் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் பௌதிகதுறையில் 1997 முதல் 2012 வரை கடமையாற்றியமையோடு துறைத் தலைவராகவும் இருந்தார். அத்துடன் அவருக்கு இங்கிருந்த காலத்தில் தமிழ் மாணவர்களுக்குச் செய்த சேவைகளுக்காக 2006 ஆம் ஆண்டுக்கான 'இளம் விஞ்ஞானி' விருதினை விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சு வழங்கி கௌரவித்தது. அத்துடன் இவர் 'உதயன்' பத்திரிகையிலும் 60 இற்கு மேற்பட்ட விஞ்ஞானக் கட்டுரைகள் எழுதினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.*